பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 17 ஞாயிற்றுக்கிழமை (01.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 214

# சமாதான முயற்சியில் அதிக பங்கு வகிக்குமாறு
# இந்தியாவுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுப்பார்!

## பஸில் தலைமையில் புதுடில்லிக்கு தூதுக்குழு விரையும்

கொழும்பு,ஜூலை 1

**இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் நோர்வே, அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் சேர்ந்து இந்தியாவும் அதிக பங்கு வகிக்குமாறு கோரி - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்நாட்டுக்கு உத்தியோக பூர்வ அழைப்பு விடுப்பதற்கு முடிவு செய்துள்ளார் என்று அறியப்படுகிறது.**

**அதன் பொருட்டு, ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான உயர் மட்ட அதிகாரிகள் குழு ஒன்று இன்னும் சில நாள்களில் புதுடில்லிக்கு விரையவுள்ளது.**

மாவிலாறு இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இம்மாதம் 26ஆம் திகதி ஒரு வருடம் பூர்த்தியாகிறது. அன்றைய தினம் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றுவார்.

அந்த வகையில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு - சமாதானப் பேச்சை ஆரம்பிக்கும் அரசாங்கத்தின் விருப்பத்தையும், திட்டத்தையும் அவர் உத்தியோகபூர்வமாக வெளியிடுவார்.

அதற்கு முன்னர், சமாதான முயற்சிக்கு அதிக அளவில் - தீவிரமாக - உதவுவதற்கான இந்தியாவின் சம்மதத்தையும் பெற்று அதனையும் தமது விசேட உரையில் வெளியிட ஜனாதிபதி விரும்புவதாகச் சொல்லப்படுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா பெரும் பங்காற்ற வேண்டும் - உதவ வேண்டும் - என்பதில் ஜனாதிபதி வெகு அக்கறையாக உள்ளதாக உயர் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

நோர்வே அமைச்சர் சொல்ஹெய்மை கடந்த மாதம் 15ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன உச்சி மாநாட்டின் போது சந்தித்துப் பேசிய வேளை -

கிழக்கு மாகாணத்தை அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் இருந்து முற்றாக மீட்டு முடிந்ததும், சமாதானப் பேச்சுக்களை நடத்த விருப்பம் தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து சொல்ஹெய்ம் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். நோர்வேத்தூதுக்குழு ஒன்றும் கிளிநொச்சிக்குச்சென்று, விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சு வார்த்தை மேசைக்குத் திரும்புமாறு கேட்க உள்ளதாகவும் அறியப்படுகிறது. (அ)

## ஜே.வி.பி. - மங்கள சந்திப்பு இவ்வார மத்தியில் இடம்பெறும்

கொழும்பு, ஜூலை 1

ஸ்ரீலங்க சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர, ஜே.வி.பித் தலைவர்களை இவ்வார மத்தியில் சந்திக்கவுள்ளார்.

தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக பேச்சு நடத்த ஏற்பாடு செய்யுமாறு மங்கள சமரவீர ஜே.வி.பியின் தலைவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இக் கடிதத்திற்கு பதிலளித்த ஜே.வி.பி. இவ்வார மத்தியில் மங்களவை சந்திக்க இணக்கம் தெரிவித்துள்ளது.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாகவும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் இரு தரப்புகளும் கலந்துரையாடவுள்ளன. (அ-1)

## திருமலை - பொலநறுவ எல்லைப் பகுதியில் முஸ்லிம் விவசாயிகள் நால்வர் படுகொலை

### இராணுவம் கொன்றதாக கூடச் சென்றவர்கள் தகவல்

திருகோணமலை,ஜூலை 1

திருகோணமலை - பொலநறுவ எல்லைப் பகுதியில் நேற்றுமுன்தினம் 4 முஸ்லிம் விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மாவிலாறு காட்டுப் பகுதியில் நன்னீர் மீன்பிடித் தொழிலுக்காகவும் தமது காணாமற்போன கால்நடைகளை தேடிக் கண்டுபிடிப்பதற்காகவும் சென்றவர்களே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுதலைப் புலிகளே கொலை செய்தனர் என்று படைத்தரப்பு தெரிவித்துள்ளது. ஆனால் கொல்லப்பட்டவர்களுடன் சென்ற ஏனைய முஸ்லிம் விவசாயிகள் அதனை மறுத்துரைத்து உள்ளனர்.

அந்தப் பகுதியில் குண்டுச்சத்தம் ஒன்று கேட்டது என்றும், தாங்கள் பாதுகாப்புத் தேடி ஒளிந்து கொண்டதாகவும் கொல்லப்பட்டவர்களுடன் சென்றவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் தப்பிவந்த ஐவரும், சிங்கள மொழியில் உரையாடிய இராணுவத்தினரே நால்வரையும் கொன்றதாகக் கூறியுள்ளனர்.

லத்தீப் என்ற சிறுவன் தான் முஸ்லிம் எனத் தெரிவித்தபோதும், படையினர் அவரை அடித்துக் கொன்றனர் என்று அவர்கள் மேலும் தெரிவித்திருக்கின்றனர்.

கொல்லப்பட்ட நால்வரின் சடலங்களும் கந்தளாய் ஆஸ்பத்திரியில் இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. கொல்லப்பட்டவர்கள் பொலநறுவ பள்ளிக்கொட என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள்.

இச்சம்பவத்துக்கும் படையினருக்கும் தொடர்பில்லை என மறுத்துள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க, தொப்பிக் கலவில் இருந்து தப்பி ஓடும் விடுதலைப் புலிகளே இத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்தத் தாக்குதலுக்கும், தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் மறுத்துள்ளார்.

மாவிலாறுப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகள் வெளியேற்றப்பட்டு விட்டார்கள் என்பது அரசின் நிலைப்பாடு. அவ்வாறு இருக்கும்போது 4 பேர் கொல்லப்பட்ட விடயத்தை எம் மீது சுமத்தி அரசு பொய்ப் பிரசாரம் செய்கிறது என்று இளந்திரையன் கூறினார். (அ-1)

## கண்காணிப்புக் குழுவில் இவ்வாரம் மேலும் 10 சர்வதேச கண்காணிப்பாளர்

கொழும்பு,ஜூலை 1

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகளில் மேலும் பத்துக் கண்காணிப்பாளர்கள் இணைத்துக்கொள்ளப்பட விருக்கின்றனர்.

கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொர்மின்னர் ஒமர்சன் இதனைத் தெரிவித்தார்.

நோர்வே, ஐஸ்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து இவர்கள் வருகின்றனர். இவ்வாரம் ஐந்து கண்காணிப்பாளர்கள் வந்து சேர்வர் என அவர் தெரிவித்தார்.

எமது செயற்பாடுகளை மீளவும் பழைய நிலைபோல் மேற்கொள்ள விருக்கின்றோம். கிழக்கில் முழு வீச்சில் தமது பணிகளை புதிய கண்காணிப்பாளர்கள் முன்னெடுப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

கிழக்கில் பிரதான அலுவலகம் திருகோணமலையில் அமையும். அம்பாறை, மட்டக்களப்புக்கான கண்காணிப்புப் பிரிவுகள் அங்கு செயற்படும்.

வடக்கில் பிரதான அலுவலகம் வவுனியாவில் அமையும். கண்காணிப்புப் பிரிவு யாழ்ப்பாணத்தில் செயற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## மூன்று மாதங்களில் 4ஆவது தடவையாக எரிபொருள் விலைகள் வெள்ளி உயர்ந்தன

யாழ்ப்பாணம்,ஜூலை 1

எரிபொருள்களின் விலை கடந்த மூன்று மாத காலத்தில் 4ஆவது தடவையாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வருவாய் குறைந்த மக்களும் பாவிக்கும் மண்ணெண்ணெய் விலை என்றுமில்லாதவாறு இம்முறை 16 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு வரை இந்த விலையேற்றம் நடைமுறைக்கு வந்துள்ளதைத் தொடர்ந்து பெற்றோல், சுப்ப பெற்றோல் 5 ரூபாவாலும், டீசல், சுப்ப டீசல் 4 ரூபாவாலும், மண்ணெண்ணெய் 16 ரூபாவாலும், செல் எரிவாயு 87 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து கொழும்பில் பெற்றோல் 106 ரூபாவில் இருந்து 111 ரூபாவாகவும் சுப்பபெற்றோல் 109 ரூபாவில் இருந்து 114 ரூபாவாகவும் டீசல் 67 ரூபாவில் இருந்து 71ரூபாவாகவும். சுப்ப டீசல் 72 ரூபா 30 சதத்திலிருந்து 76 ரூபா 30 சதமாகவும், மண்ணெண்ணெய் 51 ரூபாவில் இருந்து 67 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ-1-68-224)

## மடு உற்சவ காலத்தில் விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை அறிவிப்பர்

கொழும்பு, ஜூலை 1

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறும் மடு உற்சவ காலத்தில் விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவிப்பார்கள் எனத் தெரியவந்தது.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சமிக்ஞையாக இந்த யுத்த நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் அறிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை -

ஏ - 9 பாதையில் ஓமந்தை சோதனை நிலையத்தை வாரம் முழுவதிலும் ஏழு நாள்களும் திறப்பதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டு இணக்கத்தை ஏற்படுத்துமாறு அரசாங்கம் இணைத் தலைமை நாடுகளைக் கோரியுள்ளது.

### அபிவிருத்திக்கான நிதி உதவி வழங்கப்படும்

இதேவேளை -

இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய பாரதூரமான நிலைமைகளுக்காக அந்த நாட்டின் மக்களுக்குத் தண்டனை வழங்கவிரும்பவில்லை. தொடர்ந்து அபிவிருத்திக்கான உதவிகள் வழங்கப்படும். எனினும் மக்களுக்கான இந்த உதவியை அரசாங்கம் தனது யுத்தத்துக்கான ஆதரவெனக் கருதக்கூடாது என்றும் இணைத் தலைமை நாடுகள் அரசாங்கத்தை எச்சரித்துள்ளன. (அ-1)

## குடா நாட்டிலும் எரிபொருள் விலைகள் உயர்வடைந்தன

யாழ்ப்பாணம்,ஜூலை 1

குடாநாட்டிலும் எரிபொருள்களின் விலைகள் நேற்று அதிகரிக்கப்பட்டுள்ளன. பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் இத்தகவலை வெளியிட்டுள்ளது. புதிய விலை உயர்வின் பிரகாரம் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 75 ரூபா 55 சதமாகவும் -

பெற்றோல் ஒரு லீற்றர் 121 ரூபா 50 சதமாகவும் -

டீசல் ஒரு லீற்றர் 79 ரூபா 55 சதமாகவும் - விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை உயர்வு நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தான யாழ்.மாவட்ட முகாமையாளர் எஸ்.சண்முகநாதன் தெரிவித்தார். (அ-1-224)

## குடுமி மலையில் படை நடவடிக்கை மெதுவாகவே மேற்கொள்ளப்படுகிறது

கொழும்பு, ஜூலை1

கிழக்கில் குடுமி மலைப் பகுதியை முற்றாகக் கைப்பற்றும் படை நடவடிக்கை மெதுவாகவே மேற்கொள்ளப்படுவதாக பாதுகாப்புத் தரப்புகளுடன் நெருங்கிய வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

படைத் தரப்பை மேற்கோள் காட்டி அந்த வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாவது:-

குடுமி மலைக் காட்டுப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள், மிதிவெடிகளை அகற்றிய பின்னரே முன்னேற வேண்டியுள்ளது. அவற்றை முற்றாக அகற்றிய பின்னரே விடுதலைப் புலிகளின் பிரதேசங்களைக் கைப்பற்ற முடியும்.

கண்ணிகளை அகற்றி மெதுமெதுவாகவே நகர வேண்டியுள்ளது. இதனால் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கையைப் பூர்த்தி செய்வது தாமதம் ஆகின்றது.

எனினும் அந்தப் பகுதியை விரைவில் படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவர் என்று நம்பப்படுகின்றது.

குடுமிமலையை படையினர் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தவுடன் கிழக்கு மாகாணம் முழுமையாக அரசின் வசம் வரும் என்றும் -

ஓரிரு நாள்களில் குடுமிமலை மீட்கப்பட்டு விடும் என்றும் - பாதுகாப்புத் தரப்பு கூறிவருகிறது.

அத்துடன் கிழக்கு படை நடவடிக்கை பூர்த்தியடைந்து விடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் இராசிக்கு இந்த வாரத்துப் பலன்

(01.07.2007-07.07.2007 வரையுள்ள)

சோதிடர் சண்

## மேடம்

செந்தழலோன் என்று சொல்லப்படும் செவ்வாய் கிரகத்தின் ஆட்சி வீடான மேடராசியில் பிறந்த உங்களுக்கு- சந்திரனும், செவ்வாயும் கூடி சசிமங்களராச யோகமாக இருக்கும் இவ்வாரம் காதலர் வாரமாகும். எனவே குடும்பத்தில் மங்களகரமான அன்புடன் கூடிய இனிய வாழ்விற்கு வழிசெய்யும்.

ஆனாலும் சனி, செவ்வாய் ஒன்றை ஒன்று நோக்குவதால் வாகனம், பூமி, வதிவிடம் சம்பந்தமாக இடர்பாடுகள் வந்துசேரும். மாணவர்களுக்கு கல்வியில் சமபலனும், குடும்பஸ்தர்களுக்கு பண நெருக்கடியும், தொழில் செய்வோர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு பணச் செலவு மற்றும் வருமானம் சம பலனைத் தரும்.

## இடபம்

சந்திரனுக்கு உச்ச வீடான இடபராசியில் சந்திரன் இருக்கப் பிறந்த உங்களுக்கு- குருபார்வையால் குரு சந்திரயோகமான குடும்பச் சிறப்புடைய பலன் தரும் வாரமாகும். எனவே இந்த வாரம் தாய்வழிச் சந்தோஷம், கீழ் சகோதர நன்மைகள் கடல் கடந்த நாட்டு உதவிகள் மற்றும் லாபம், சுகம் தரும் காலமாகும். மாணவர்களுக்கு கல்வியில் நற்பலனும் குடும்பத்தவர்களுக்கு ஆள், வேலையாட்களால் பிரச்சினைகளும், உத்தியோகத்தர்களுக்குச் சமபலனும் தரக்கூடிய வாரமாகும்.

## மிதுனம்

புதனுக்கு ஆட்சிவீடான மிதுனராசியில் சந்திரன் இருக்கப் பிறந்த உங்களுக்கு, ''லட்சுமி நாராயணன்'' என்ற தெய்வ அனுகூலம் பெற்ற உங்களுக்கு-

இந்த வாரம் சமபலன் தரக்கூடிய வாரமாகும். மேலும் ஏழரைக் கடைக்கூறாகவும், வியாழ சுகம் இல்லாத நிலையிலும் இந்தவாரம் குடும்ப ரீதியாக சதா பிரச்சினைகளும், பணச் செலவும், நிம்மதி தராத நிலையும் உண்டு.

குடும்பஸ்தர்கள் தொழில் மற்றும் பணத்தால் ஈடு செய்ய முடியாத பிரச்சினைக்குட்பட்டாலும் வார இறுதியில் பாதிப்பிராது. மாணவர்களுக்கு கல்வி குழப்பம் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு தொழில் ஸ்தானத்தில் பகையும் ஏற்படும்.

## கடகம்

சந்திரனுக்கு சொந்த வீடான கடகராசியில் பிறந்த உங்களுக்கு- இந்தவாரம் ஏழரைச் சனி பகவானுடைய நடுக்கூறு காலமாக இருந்தாலும் குரு 5ஆம் இடத்திலிருந்து சந்திரனைப் பார்ப்பதால், துன்பங்கள் வந்தாலும் சூரியனைக் கண்ட பனி போன்று நீங்கிவிடும்.

பணவருவாய் மற்றும் வாகனச் சுகம் தருவதுடன் குடும்பரீதியாக கூடாதென்று சொல்வதற்கில்லை. எனினும் செய்தொழில் விடயத்தில் இழப்பு, நட்டம் என்பன தரக்கூடிய நிலையும் உண்டு. தாய்வழியால் ஏற்படக்கூடிய கஷ்டங்கள், துன்பங்கள் நீறுபூத்த தணல் போன்று இருக்கும். வியாழசுகம் இருப்பது பாதிப்பைத் தராது.

## சிங்கம்

சிவனுடைய வலக்கண்ணிலிருந்து தோன்றிய சூரிய பகவானை ஆட்சி வீடாகக் கொண்ட சிங்கராசியில் சந்திரன் இருக்கப் பிறந்த உங்களுக்கு-

இந்த வாரம் குடும்பஸ்தர்களுக்கு பணச் செலவு, கடனாளிகள் தொல்லை, தொழில் செய்பவர்களுக்கு கடல் பிரயாணத்தால் நட்டம் மற்றும் தொழில் நிலை மாற்றம் என்பன ஏற்படும். ஏழரைச் சனிபகவானுடைய முற்கூறின் பகுதியும், வியாழ சுகமில்லாத நிலையிலும் குரு பார்வையால் குடும்ப சுகமுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஓரளவு நற்பலனும் பெறுபேறுகளும் தரும் காலமாகும்.

## கன்னி

மகர விஷ்ணுவை அதிதேவதையாகக் கொண்ட புதன் கிரகத்தின் உச்சவீடான கன்னி ராசியில் பிறந்த உங்களுக்கு-

இந்தவாரம் நற்பலன்கள் தரும் காலமாகும். நல்வியாழனும் 11இல் சனி இருப்பதும் சனியை குருபார்ப்பதும் உங்களுடைய உடைமை, சொத்து, வாகனம், பூமி இப்படியானவை இழப்பிலிருந்து மீட்சி பெறும் வாரமாகும்.

ஆனாலும் சகோதரபகை, உங்களுக்காக வேலை செய்பவர்களால் பிரச்சினைகள் வந்து தீரும். குடும்பஸ்தர்களுக்குச் சிறப்புண்டு. தொழில் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு தொழிலால் சிறப்புண்டு.

## துலாம்

தராசு நிலையிலிருந்து நடுநிலை வழங்கும் துலாம் ராசியில் சந்திரன் இருக்கப் பிறந்த உங்களுக்கு-

2இல் குருவும், 7இல் செவ்வாயும், 10இல் சனியும் நிற்கும் இவ்வாரம் குடும்பநலன் தரும் காலமாகும். மேலும் இந்த வாரம் குரு குடும்பஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்தைப் பார்ப்பதால் குடும்பஸ்தர்களுக்கு குடும்பச் சிறப்பு மற்றும் தொழிலால் நற்பலனும் மேலதிகாரிகளின் ஆசியும் ஆதரவும் கிடைப்பதுடன் தொழில் நிலையில் சிறப்புண்டு.

## விருச்சிகம்

செவ்வாய்க்கு ஆட்சிவீடான விருச்சிக ராசியில் சந்திரன் இருக்கப் பிறந்த உங்களுக்கு-

இந்த வாரம் ஜென்மத்து வியாழன் இருக்கும் இக்காலப்பகுதி இனசன விரோதம் மற்றும் பணச் செலவு, தொழில் நிலையில் மந்தமான பலனும் தரும்.

மேலும் குடும்பஸ்தர்களுக்கு புத்திரரால் கஷ்டங்களும், வாகனம், பூமியால் கஷ்ரங்களும் தரக்கூடிய காலமாகும். உத்தியோகஸ்தர்கள், தொழிலாளர்களுக்கு தொழில்நிலையில் சமபலனும் தரும் வாரமாகும்.

## தனுசு

வியாழ பகவானை இராசி அதிபதியாகக் கொண்ட தனு ராசியில் சந்திரன் இருக்கப் பிறந்த உங்களுக்கு-

அட்டமத்துச் சனி பகவானுடைய காலமாகவும் வியாழசுகம் இல்லாத நிலையில் இந்த வாரம் கீழ் சகோதரர்களால் கஷ்டமும், பொருள் இழப்பும், பிராயாணத் தடையும் தொழிலால் நன்மை தராத பலனும் உண்டு. குடும்பஸ்தர்களுக்கு தொழிலால் நற்பலனும் உத்தி யோகத் தர்ளுக்கு தொழில் உயர்ச்சியு முண்டு.

## மகரம்

சனி பகவானுடைய ஆட்சி வீடான மகர ராசியில் சந்திரன் இருக்கப் பிறந்த உங்களுக்கு-

சனி, சந்திரன் ஒரு நேர்கோட்டில் இருப்பதால் ஏழரை மாதிரிப் பலன். இதனால் இந்த வாரம் துன்பங்கள் நிறைந்த வாரமாக இருந்தாலும் 11இல் குரு இருப்பது பணவரவு, வெளியூர் நன்மைகள், அதிர்ஷ்டம் தரும் காலமாகும்.

குடும்பஸ்தர்களுக்கு வரவுடன் கூடிய நன்மை தரும் காலமாகும். உத்தியோகத்தர்கள், தொழிலாளர்களுக்கு தொழிலால் சிறப்புத் தரும் வாரம்.

## கும்பம்

சனிபகவானுடைய ஆட்சி வீடான கும்பராசியில் சந்திரன் இருக்கப் பிறந்த உங்களுக்கு-

இந்த வாரம் தொழில் நிலை சமபலன் தரும். எதிரிகள், சத்துருக்கள் இருந்தாலும் அவர்களை வெல்லக்கூடிய அனுகூலமான வாரமாகும்.

குடும்பஸ்தர்களுக்கு இந்தவாரம் எதிரிகளை வெல்லவும் தொழில், உத்தியோகத்தர்களுக்கு சமபலன் தரும் காலமாகும்.

## மீனம்

வியாழ பகவானை தனது வீடாகக் கொண்ட மீனராசியில் சந்திரன் இருக்கப் பிறந்த உங்களுக்கு-

இந்த வாரம் குரு 9 இல் இருந்து நற்பலன் தருவதால் பணவரவு, அதிர்ஷ்டம் தரும் காலமாகும். புத்திரரால் சிறப்பும் வாகனம், பொருள், உடைமைகள் கிடைத்து அனுபவிக்கக் கூடிய வாரமாகும். மாணவர்களுக்கு கல்வி நிலையில் நற்பலன் உண்டு. குடும்பஸ்தர்களுக்கு புத்திரரால் சிறப்புண்டு. தொழில்பார்ப்பவர்களுக்கு உயர்நிலைச் சிறப்புண்டு.


### யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

இன்று முதல் பாணின் விலை மாற்றம்

| | | |
|---|---|---|
| பாண் | 400 கிராம் | 34.00 |
| கிறீம் பணிஸ் | 150 கிராம் | 20.00 |
| ரீ பணீஸ் | 130 கிராம் | 17.00 |
| கொம்பு பணிஸ் | 70 கிராம் | 10.00 |
| சங்கிலி பணிஸ் | 130 கிராம் | 17.00 |
| அடைக்கேக் | | 15..00 |

ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அரசாங்க அதிபரின் அறிவுறுத்தல்களுக்கமைய)

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்.


### கண்ணீர் அஞ்சலி

**வேலுப்பிள்ளை தம்பு (தருமு)**

எமது சங்கப் பொதுச்சபை உறுப்பினர் த.சத்தியலோகேஸ்வரனின் அன்புத் தந்தை வேலுப்பிள்ளை தம்பு காலமாகிய செய்தி அறிந்து துயரமடைவதுடன், அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவைக் கந்தன் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம்.

(62372)

### மரண அறிவித்தல்

**திருமதி பரமலிங்கம் சின்னப்பிள்ளை**

(இரத்தினம்)

அல்லைப்பிட்டி, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமலிங்கம் சின்னப்பிள்ளை (இரத்தினம்) நேற்று (30.06.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்பலம் பரமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் முருகேசு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் பொன்னம்பலம்- மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் யோகநாதன், லலிதாம்பிகை, சாந்தகுமாரி, வசந்தலீலா, ஐங்கரன் ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயமலர் (லண்டன்), காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (நவாலி), சோதிலிங்கம், அருள்நாதன் (நாரந்தனை), குட்டி (ஏழாலை) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
திருநெல்வேலி கிழக்கு,
முடமாவடி.
(பூங்கனிச்சோலை பின்புறம்)

தகவல்:
குடும்பத்தினர்.


### இடமாற்றம்

இல.342, கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள மேனகா பிறிண்டேர்ஸ் 29.06.2007 இலிருந்து இல.68, கன்னாதிட்டி வீதிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம். தொடர்புகளுக்கு: 021 222 9468 (62321) உரிமையாளர்.

### இறைச்சிக்கோழி

உயிர் புறொயிலர் இறைச்சி, கல்பேட் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு

NEW R.S.K FARM

(62330) மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி சோமசுந்தரம் அவனியூவில் புனித பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் சிறு காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0112512800, 021 222 9026

(62348) சுண்டுக்குளி.

### புறொயிலர் கோழி விற்பனைக்கு

உயிருடன் புறொயிலர் கோழிகள் விற்பனைக்கு உண்டு. உடன் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: ஷோல்டன் பாம்
(62353) 77, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

40' சொக்கட்டான் பந்தல், 40' தகரப்பந்தல், முத்து மணவறை என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 9452015, 222 2193

(62303)

### கோழி இறைச்சி விற்பனை

ஐஸ் பிறிமா, உயிருடன் புறொயிலர், கல்பேட்ஸ், ஊர் சேவல், விறாத்து குஞ்சுகள் என்பன மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி,
யாழ்ப்பாணம். (62260)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்




Station Road, Kondavil. ☎ 021-4590291


### மரண அறிவித்தல்கள்

**வேலுப்பிள்ளை - தம்பு (தருமு)**



மாவிட்டபுரம் சாயுடையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை - தம்பு (29-06-2007) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை- கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் பொன்னுப்பிள்ளை, புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் சர்வலோகேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி, நகுலேஸ்வரி, சத்தீஸ்வரன் சத்தியலோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாதம், துரைராசா, நடேஸ்வரன், கருணாகரன், சுபாஜினி, கமலாதேவி ஆகியோரின் மாமனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-07-2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு. (62364)

தகவல்:
பிள்ளைகள்.

**நடனசிங்காரவேல் லோகேந்திரன்**



ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடனசிங்காரவேல் லோகேந்திரன் 29.06.2007 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் நடனசிங்காரவேல் (முன்னாள் பணியாளர், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) - முத்துமணி தம்பதியரின் அன்பு மகனும் அகிலாவின் அன்புக் கணவரும் தவசிகா (யா/கோண்டாவில் இராமகிருஸ்ணா மகாவித்தியாலயம்), மதுஷன் (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), மதுசனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பராணி, விக்னேஸ்வரி, கமலேஸ்வரி, வடிவேல், வரதராசன், சுரேந்திரன், மகேஸ்வரி, பிரியதர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகதீசன்-மங்களேஸ்வரி தம்பதியரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூத்தவிநாயகர்
கோயிலடி,
ஆனைக்கோட்டை. (62389)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுசார் ஒளிபரப்புகளைப் பார்ப்பதற்கு குறைந்த நேரத்தை ஒதுக்கும் குடாநாட்டினர்!

**மக்களின், மாணவர்களின் அறிவுசார் வளர்ச்சிக்கு, உலக ளாவிய ரீதியில் மிகப் பெரிய அளவில் உதவி வருகின்றது ஊடக அறிவுக் கல்வி.**

**குடாநாட்டில், எந்தளவிற்கு அது பயன்பாடு காண்கிறது என்பது சம்பந்தமாக இந்தக் கட்டுரை விரிவாக ஆராய்கிறது.**

**யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் என்.சண்முகலிங் கனும் சமூகவியல்துறை மாணவர்களும் மேற்கொண்ட ஆய்வுகள், மதிப்பீடுகளின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகிறது.**

**தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளையின் நினைவுப் பேருரை இங்கு கட்டுரை வடிவத்தில்.**

ஊடக அறிவு என்ற பதம் தமிழுக்குப் புதியது. ஆனாலும் அதன் அவசியம் எங்களுக்காகி வெகு நாள்களாகிவிட்டது. புதிய தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவான வெகுஜன ஊடகங்களின் நீட்சியில் எங்களின் அனைத்துவகை அனுபவங்களும் நிர்ணயமாகின்றன. ஏற்கனவே இருந்த அனுபவங்கள் உருமாற்றப்படுகின்றன. நுண்நிலையில் தனி மனிதரிடத்தும் பருநிலையில் பண்பாட்டுத் தளத்திலும் துரிதமாகவே இந்த மாற்றங்கள் நிகழ்கின்றன.

நவீன சமூக உலகை விளங்கிக்கொண்டு அதிலே அர்த்தமுள்ள வினைத்திறனான மேம்பட்ட வாழ்வினைக் காண்பதிலிருந்து, இந்த நவீன வாழ்வு எங்களுக்குத் தந்துள்ள துயரங்களிலிருந்து கற்பனை சுகமென தப்பிக் கொள்வது வரை ஊடகங்கள் எங்களுக்குள் விதைக்கின்ற வாழ்வின் பரிமாணங்கள்.

எங்களது அறிவு, மனவெழுச்சி, அழகியல், ஒழுக்கவியல் என அனைத்து முகங்களிலும் ஊடகங்கள் விதைக்கின்ற பண்பாட்டின் தாக்கங்கள் இன்றைய மனிதனின் நீட்சியாய் அவன் பார்வை, கேள்வி, தொடுகை, காலம், வெளி என எல்லாமே ஊடக ஆட்சியின் கீழ் உள்ளன.

மூன்றாம் உலக நாடுகள் என்றும், வளர்முக நாடுகளின் பிரஜைகள் என்றும் பல்வேறு தர நிர்ணயங்களில் தாழ் நிலையைப் பெற்றபோதும் ஊடக பாவனை என்ற அளவுகோலில் வளர்ச்சியடைந்த நிலையில் எங்கள் இருப்பு.

எங்களது இந்த இருப்புக்கான மிக எளிதான ஒரு குறிகாட்டியாக ஒரு நாளில் எங்கள் வீட்டுத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் எத்தனை மணி நேரம் குந்தியிருக்கின்றோம் என்ற அளவீட்டினைக் குறிப்பிடலாம். அவ்வாறே இந்த வெகுஜன ஊடகங்களின் வழி எதனைப் பெற்றுக் கொள்கின்றோம்? நாம் பெறுகின்றவற்றின் சமூகப் பெறுமதி எத்தகையது? அவை நமக்குள் விதைக்கின்ற நம்மூடாக நாம் வாழும் சமூகத்துக்குத் தருகின்ற விழுமியங்கள் எத்தகையன என்ற வினாக்களுக்கான விடைகளைக் காண்கின்ற வழிமுறையாகவே

துரையப்பாபிள்ளை. சுய பண்பாட்டு மேம்பாட்டுக்கான பாவலரின் பணிகள் பன்முகத்தன. சிந்தனையாளராக, செயல்வீரராக அவர் தடம்பதித்ததுறைகளில் பத்திரிகைத்துறையும் ஒன்றாகும். அந்நாளில் அந்த ஊட கங்களை சமூக அறிவு மேம்பாட்டுக்காய் பயன்படுத்திய பாவலரின் அர்ப்பணிப்பும் ஊடக அறிவும் விதந்துரைக்கப்படுவது.பாவலர் காலத்து ஊடகங்களின் பரப்பெல்லையைக் கடந்து புதிய புதிய ஊடக வலைப் பின்னல்களுக்குள் எங்கள் வாழ்வு புகுந்து ஒரு நூற்றாண்டாகிறது.

**தொலைக்காட்சியும் வீடியோவும் யாழ்ப்பாணத்தில்**

வெகுஜன தொடர்புச் சாதனங்களில் அதிக தாக்கம் கொண்டதாக விளங்கும் தொலைக்காட்சியும் தொலைக்காட்சியின்

திற்குரியன. நடுவீட்டுக்குள் தொலைக்காட்சி தரிசனம், படிக்கின்ற பிள்ளைகள், ''படியாத பெரிய பிள்ளைகள்'' அனைவரினதும் சங்கமம். சமூக மேம்பாட்டிற்கான குறிகாட்டியாகக் கருதப்படும் எழுத்தறிவு, கல்வி அடைவுகளுக்கும் தொலைக்காட்சி, வீடியோ தரிசனங்களுக்கும் குறிப்பிடத்தக்களவுக்கு இணைப்பு இருப்பதாகத் தெரியவரவில்லை.



பேராசிரியர்
என். சண்முகலிங்கன்
தலைவர்,
சமூகவியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

எனினும் பிள்ளைகளின் கல்வி, பரீட்சை பற்றிய விழிப்புணர்வு அதிகரிக்கும் வேளை களில் பிள்ளைகளைப் படிக்கும் அறைக்குச் செல்ல நிர்ப்பந்திக்கும் நிலைமைகளை அவ தானிக்க முடிகிறது.

எங்களது ஆய்வுக் களங்களில் கிட்டத்தட்ட 20 சதவீதமான இல்லங்களில் மட்டும் பெற்றோர்களின் ஊடக விழிப்புணர்வு தொலைக்காட்சிப் பாவனையை முற்றாகத் தவிர்ப்பதன் வழி வெளிப்பட்டது. மிகச் சிறிய அளவில் 5 வீதமான இல்லங்களில் மட்டும் ஓரளவுக்கு நிகழ்ச்சிகளைத் தேர்ந்து பார்க்கும் நிலைமையைக் காண முடிகிறது.

பண்பாட்டமைப்புக்கள் வீடியோவை சித்தரிக்கும் அறிவுத்தளம் இங்கு அறியப்படாத அனுபவமாகும். அறிந்தவர்களுக்கும் அதனை வழங்குவதற்கு யாரும் இல்லை. தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் பயனான நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு நேர நிர்ப்பந்தம் உள்ளவர்கள் அவற்றினைப் பதிவு செய்து தமக்கு வாய்ப்பான நேரங்களில் காண்பதற்கான கருவியாகவே வீடியோவின் வரவு என்ற கருத்தாக்கத்திற் கும் இங்கு அர்த்தமில்லை.

தொலைக்காட்சிக்குள்ள அதே தெரிவு

## வீடியோவுக்கான தெரிவு நியமங்களில் புதிய சினிமாக்களைப் பார்ப்பதற்கே முதலிடம்

விரிவாக்கமாகவே எங்கள் புலங்களில் உணரப்படும் வீடியோவுமே இந்த உரையின் குவிமையங்களாகின்றன. தனியனிலிருந்து சமூகம் வரை ஆழ்ந்த செல்வாக்கினைக் கொண்டுள்ள இந்த ஊடகங்களின் பாவனை யாழ்ப்பாணத்தில் எவ்வாறுள்ளது?

தேர்ந்தெடுத்த சமூகப்புலங்கள், பாடசாலைகள், இந்த ஊடக உள்ளடக்க விநியோகஸ்தர்களுடனான நேர்காணல்கள், அவதானங்களினடியாக எங்களது ஆய்வுகள் வெளிப்படுத்திய உண்மைகள் கவலை தருவன.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கென தரப்படும் நேரம், அதிகளவு நுகரப்படும் நிகழ்ச்சிகளின் தன்மை, வீடியோவைப் பயன்படுத்தும் விதம், வீடியோ நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுக்கும் விதம் என்பன பற்றிய அடிப்படையான கேள்விகளுக்கு நாங்கள் கண்ட பதில்கள் எமது சமூகத்து ஊடக அறிவின் மோசமான நிலைமையைப் பிரதி பலிப்பனவாகவே உள்ளன.

தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கான காரணங்களில் பொழுதுபோக்கு என்பதே அதிகளவு வீதத்தில் அமைந்திருந்தது. யாழ்ப்பாண நகரத்தை அண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 73 சதவீதமானவர்கள் பொழுதுபோக்கிற்காகவே தொலைக்காட்சி

தொலைக்காட்சி நிகழ்ச்சி தெரிவு என நியமங்கள் பெரிதாக ஏதுமில்லை. தரப்படும் தொலைக்காட்சித் தொடர்களின் அஞ்சல் ஓட்டமாகவே அது அமைந்து விடுகிறது. இந்த அஞ்சல் ஓட்டத்தின் தரிசன அளவுக்கேனும் வீடுகளில் பெண் விடுதலை உள்ளது. '' கிரிக்கெட் மச்'' தொடர் ஒளிபரப்பு வேளைகளில் மட்டும் ஆணாதிக்கம் வெற்றி பெறுகிறது. [இந்நாள்களில் தொலைக் காட்சி சீரியல்கள் நிறுத்தப்பட்டு விடுவதும் உண்டு]

**அறிவுசார்ந்த ஒளிபரப்புக்கு மட்டுப்படுத்தப்பட்ட நேர ஒதுக்குகை**

பொதிகை போன்ற தேசிய தொலைக் காட்சி நிலைய ஒளிபரப்புக்கள் மற்றும் அறிவு சார்ந்த ஒளிபரப்புக்கான நேர ஒதுக்குகை மிக மட்டுப்பாடானதாகவே உள்ளது. இவ்வளவு நெருக்கடிகளிடையேயும் 'டிஸ் அன்ரனா', 'கேபிள் ரீவி' தொழில் நுட்ப வசதிகள் இங்கு பரவலாகி வருகின்றமையும் கவனத்திற்குரியது. வீட்டிலே கேபிள் ரீவி பொருத்துவதற்கான விவாதங்களில் அறிவு பூர்வமான காரணங்களாக National Geogra phic Channel, B.B.C உலக செய்திகள் போன்றவை முன்வைக்கப்பட்டாலும் தொடர்பு கிடைத்தபின் சன் ரீவிக்கே நேரம் போதாமல் போய்விடுகின்றது! 'சலனத்திலிருந்து கோலம்' வரை தொடக்க இசையே பலருக்குப் பாடமாக இருக்கின்றது.

மின்சாரம் எட்டாத அல்லது எட்டியும் கிட்டாத இல்லங்கள் இந்தத் தொடர் ஊடக சாதனங்களை இன்னமும் தொட முடியாத இல்லங்களைப் பொறுத்தவரையில் மேற்குறித்த நிலைமைகள் பொருந்தா. எனினும் அவ்வாறான இல்லங்களின் ஏக்கப் பெரு

நியாயங்களே வீடியோவுக்குமாகின்றது. தொலைக்காட்சிக்கு வராத, திரைக்கு வராத 'புத்தம் புதிய திரைப்படங்களை' பார்ப்பதற்கு அல்லது தமக்கு பிடித்த நாயகர், நாயகிகளை மீள மீள காண்பதற்கு அவர்களது 'ஸ்ரைல்' பாவனைகளைக் கற்றுக் கொள்வதற்கான பயிலரங்குகளாகவே வீடியோத் தெரிவுகள்; தரிசனங்கள்;

இவற்றுக்கு மேலாக பண்பாடு கண்ட வாழ்க்கை வட்டச் சடங்குகளான பூப்பு சடங்குகள், திருமணம் போன்றவற்றினைக் கொச்சைப்படுத்தும் வீடியோப் படப்பிடிப்புகள் சுற்றம் சூழ பின்னர் ரசிக்கின்ற அபத்தங்கள். இடைக் காலத்து பூப்புச் சடங்குகளை நடத்து வதற்கு மறுப்புச் சொன்ன பிள்ளைகள், இப்போது வீடியோப் படப்பிடிப்பிற்காகவே பெற்றோரை நிர்ப்பந்திப்பதாகவும் நியாயங்கள் முன்வைக்கப் படுகின்றன. இந்த அபத்த நாடகத்தில் இன்று மரண வீடுகளும் தப்பவில்லை.

**விளைவுகள் குறித்து சிந்திக்காமல் எல்லாம் மின்சாரக் கனவாக**

மேற்கண்ட இந்த நிலைமைகளின் விளைவுகளைப் பற்றிய சிந்தனை கிஞ்சித்துமில்லாமல் மின்சாரக் கனவாக எல்லாம் நடக் கின்றது. பல்வேறு தளங்களிலும் இந்தக் காட்சி அனுபவத் தாக்கங்கள் வெளிப்படுகின்றன.

சமூகவியலாளர்களான பீற்றர் பேஜர் (Peter Beger) தோமஸ் லக்மன் (Thomas Luckman) போன்றோர் முன்வைத்த சமூக யதார்த்தங்களை கட்டமைக்கும் வெகுஜன ஊடகக் கோட்பாடு எங்கள் சமூகச் சூழலுக்கு வெகுவாகவே பொருந்துகிறது. ஒரு புறத்தில் தங்களை இழப்பதும் மறுபுறத்தில் சூழமைவின் நலங்களைத் துறப்பதுமாக இந்தக் கனவுப் பயணம் தொடர்கின்றது.

பிள்ளைகளால் படிக்க முடியவில்லை அல்லது படிப்பதற்கான நேரம் சுருங்கிப் போய் உள்ளது. இவ்வாறே விளையாடுவதற்கான நேரம், அம்மா அப்பா சுற்றத்துடன் உறவாடுவதற்கான நேரம், ஓய்வெடுப்பதற்கான நேரம் என அனைத்துமே குறுகிப் போகிறது. சமூக ஈடுபாடு என்பதே முற்றாக அற்றுப் போகிறது. பிள்ளைகள் இயல்பாக வளர்வதற்கும் ஆற்றல்களைப் பெறுவதற்கும் இன்றியமையாத தேடலையும் ஆக்கத்திறனான கற்பனையையும் சாகடித்து 'முட்டாள் பெட்டி' ஒன்றுக்குள் முகம் புதைக்கும் இருப்பையே மிஞ்ச வைக்கிறது.

ஊடகங்கள் சார்ந்த எங்கள் சமூகத்தின் நிலைமை பற்றி இந்த தரிசனங்களிடை ஊடகவியல் அறிஞரான மார்ஷல் மக்லூகன் குறிப்பிட்ட அர்த்தமுள்ள வார்த்தைகள் மேலெழுவது தவிர்க்க முடியாதது. 'மீன் தன் ஈரத்தை உணருமா' என்ற வினாவை எழுப்பி 'இல்லை' என்ற பதில் தந்து விளக் கமும் சொல்லுவார் மக்லூகன். நீரின் மேலாண்மைக்குள் இருக் கும் வரை உணரப்படாத உண்மையை உணரும் நிலைமை என்பது நீருடனான அதன் தொடர்பறு நிலைமையாக, நிகழ முடியாத ஒன்றாகவே அவரால் குறிப்பிடப்படும்.

எங்களது நிலைமையை விளங்கவும் - விளக்கவும் இந்த மீன் கதை பயன்பட்டாலும் நிலைமையை மேம்படுத்தலில் ... நம்பிக்கையை தந்துவிடும் இந்த இட...தில் தான் ஊடக அறிவு வரப்பிரசாதமாகின்றது.

## ஊடகத்தின் மூலம் அறிவைப் பெருக்கும் பெறுமதியான காலத்துக்கு நாம் எப்போது?...!

ஊடக அறிவு என்ற புதிய அறிவுப் பரப்பின் தரிசனம்.

ஒரு காலத்தில் ஒரு சமூகத்தின் மேம்பாட்டினை அளப்பதற்கான இன்றியமையாத குறிகாட்டியாக எழுத்தறிவு பயன்பட்டது. இன்றும் கூட அதன் முக்கியத்துவம் உள்ளது. வாய்மொழியான அறிவின் கையளிப்பு எழுத்தறிவுப் பண்பாட்டுடன் பாரிய மாற்றங்களைக் கண்டது. இன்று எழுத்தறிவைக் கடந்து ஊடகங்களின் வழியான அறிவும் பண்பாடும் வியாபாரமாகியுள்ளது. தங்கள் இருப்புக்கும் நிறைவான வாழ்விற்கும் அரணாகும் ஊடகங்களை மக்கள் எப்படிப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அதன் உச்ச பயன்பாட்டை எப்படி உறுதி செய்யலாம் என்ற எல்லைக்குள் ஊடக அறிவின் தேடல் இன்று உலக சமூகங்கள் பலவற்றிலும் ஆரம்பமாகி உள்ளது.

கிட்டத்தட்ட 40 நாடுகளின் பாடசாலைக் கலைத்திட்டத்தில் இன்று ஊடக அறிவு இடம்பிடித்துள்ளது. ஆரம்ப, இடைநிலைப் பாடசாலை மட்டங்களில் ஊடக அறிவின் பயன்களைப் பெற்றுள்ள இந்த நாடுகளின் அனுபவங்கள் எங்களுக்காவது எப்போது? தாமதிக்கும் கணங்கள் எல்லாம் பாதகமானவையே எனும் சமூக சிந்தனையாளர்களின், சமூகவியலாளர்களின் ஆதங்கத்தினை அடியாகவே இந்த நினைவுப் பேருரை வடிவம் பெறுகின்றது.

குடியேற்ற நாட்டாதிக்க காலத்து சுய பண்பாட்டின் மேன்மைக்கான காவலராக எங்கள் பண்பாடு கண்ட ஆளுமை பாவலர்

நுகர்வு என்ற அதேவேளையில் 15 வீதத்திற்குக் குறைவானவர்களே ஏனைய அறிவியல் தகவல் பெறும் நோக்கிற்காக எனும் பதிலைத் தந்திருந்தனர். இன்னும் சில புலங்களில் காரணம் இல்லாமலே தொலைக்காட்சிக்கு அடிமையாகிப் போயுள்ளவர்கள் பற்றிய பதிவுகளையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் ஆய்வுக்கு உட்பட்டவர்களில் கிட்டத்தட்ட 40 சதவீதமான மாணவர்கள் தாம் தொலைக்காட்சிக்கு அடிமையாகி விட்டோம் எனக் குறிப்பிட்டனர். எங்களது சூழலில் 10-15 சதவீதத்தினர்தான் இவ்வா றான வகைப்பாட்டிற்குள் அடக்கக்கூடியவர்களாக உள்ளனர். எனினும் இந்த அளவு அதிகரித்துச் செல்வதாகவே உணர முடிகிறது.

**சமூக மேம்பாட்டுக்கான ஊடக அறிவுக் கல்வி 1**

இவ்வாறாக சதா தொலைக்காட்சிக்குள் அமிழ்ந்து போகும் குழந்தைகளின் குடும்பச் சூழல் பற்றிய தரவுகளும் இங்கு நம் கவனத்திற்குரியன. பிள்ளைகளோடு தங்கள் நேரத்தினைப் பகிர முடியாத பெற்றோர்கள் அல்லது அன்பாதரவாக நடந்து கொள்ளாத பெற்றோர்களைக் கொண்ட இல்லங்களிலேயே இவ்வாறான எல்லை கடந்த நுகர்வு இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**நடுவீட்டுக்குள் தொலைக்காட்சி**

இத்தகு தொலைக்காட்சி, வீடியோக்காட்சி சூழமைவு பற்றிய அவதானிப்புகளும் கவனத்



வெளியில் இந்த தொலைக்காட்சிக் கனவுகள் நிறைந்திருப்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டும். வாடகை ஜெனரேட்டர், ரீவி, டெக் உபயத்தில் வீடியோ நுகர்வும் இவர்களின் ஏக்கங்கள் தணிக்கப்படுகின்றமையும் இங்கு நம் கவனத்திற்குரியன.

எங்கள் புலங்களில் ஒட்டு மொத்தமான வீடியோ பாவனையும் அறிவுபூர்வமானதல்ல எங்களது ஓய்வுநேரங்கள் வீடியோக்காரரினால் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளன. வேலைக்கான வேளைகளும் கூட விழுங்கப்படுகின்றன. வீடியோப் பாவனை தொடர்பான உலகின் நலமான அனுபவங்கள் எங்களிடம் இல்லை. மரபார்ந்த வெளிப் பாட்டுக் கலைகளை, பண்பாட்டியல் விபரணங்களை, கல்வி சார்ந்த நிகழ்ச்...களைக் காண்பதற்கான மார்க்கமாக யு...ஸ்கோ போன்ற

[வளரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்டப் போட்டிகள் இல்லாமல் தேசியப் போட்டிகளில் பிரகாசிக்க முடியுமா?

முன்பு ஒரு காலத்தில் விளையாட்டு என்று கூறித் தட்டிக் கழித்த விடயம் இன்று கல்வி வளர்ச்சிக்கான ஒரு படியாக அமையத் தொடங்கியுள்ளது.

இப்போது பல்கலைக்கழக அனுமதி, தேசிய கல்வியற் கல்லூரி அனுமதி எனப் பல்வேறு துறைகளுக்கு விளையாட்டில் காட்டிய திறமைகள் புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்து கல்வி முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவி வருகின்றன.

இந்த உண்மையை இன்று யாரும் புறம் தள்ளாத நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் வடமாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்களின் விளையாட்டுத் துறையில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள ஒரு தளர்வு மாணவர்களின் கல்வியிலும் பாதிப்பை ஏற்படுத்தப் போவதாகக் கல்விமான்களும் மாணவர்களின் பெற்றோர்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போது யாழ்.மாவட்ட மட்டப் போட்டிகள் முடிவடைந்துள்ளன. இதனையடுத்து நடைபெறும் மாகாண மட்டப் போட்டிகள் எதுவும் இதுவரை நடைபெறவில்லை. அதற்கான ஏற்பாடுகள் எதுவும் நடைபெறுவதாகத் தெரியவரவில்லை.

இந்நிலையில் மாகாண மட்டப் போட்டிகளை நடத்தாமல் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளுமாறு வடமாகாணக் கல்வி

## மாணவர்களின் எதிர்காலக் கல்வியில் விளையாட்டுக்கும் பெரும் பங்கு

அமைச்சு சம்பந்தப்பட்ட தரப்புக் களுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் மாகாணமட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளும் வீர, வீராங்கனைகள் தெரிவும் நடைபெற்று முடிந்துள்ளதாக அறியப்பட்டுள்ளது.

ஆயினும் வடமாகாணத்தில் மட்டும் மாகாணமட்டப் போட்டி நடைபெறாமல் மாவட்ட மட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற வீர, வீராங்கனைகளை தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்க அழைத்துச் செல்லும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு மாகாண மட்டப் போட்டிகளை நடத்தாமல் தேசிய மட்டப் போட்டிகளுக்கு மாணவர்களைக் கொண்டு செல்லும் விடயம் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### சூடாநாட்டின் விளையாட்டரங்குகளில்

அதாவது மாகாணமட்டப் போட்டிகளை நடத்தி அதன் மூலம் வீரர்கள் தெரிவு செய்யப்பட்டால் அது ஒரு திருப்திகரமான தெரிவாக அமையும். காரணம் அந்த மாகாணத்தில் உள்ள காரணம் எல்லா மாவட்டங்களிலும் சிறந்த பெறுபேற்றைக் பெற்றுக் கொண்ட விரர்கள் மாகாணமட்டப் போட்டிக்கு வருவார்கள். அதன் பின்னர் மாகாணமட்டத்தில் தெரிவு செய்யப்படும் வீரர்கள் தேசிய மட்டப் போட்டிக்குச் செல்லமுடியும்.

அவ்வாறு இல்லாமல் மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டவர்களை தேசிய மட்டத்திற்கு கொண்டு செல்வதன் மூலம் அங்கு சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளமுடியாது. திறமையான வீரர்கள் இனங் காணப்படாமையே இதற்குக் காரணம்.

அத்துடன் மாகாணமட்டப் போட்டிகள் நடத்தப்படாமையால் மாகாணமட்டச் சான்றிதழ்களும் வீரர்களுக்கு கிடைக்காமல் போகும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

மாகாண மட்டத்தில முதல் இரண்டு இடங்களைப் பெற்றுக்கொள்ளும் வீரர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதி ஆகியவற்றின் மேலதிக புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதிக்கு 8 புள்ளிகள் மாகாண மட்ட விளையாட்டுச் சான்றிதழ் மூலம் கிடைக்கின்றது. அத்துடன் தேசிய மட்டச் சான்றிதழுக்கு 12 புள்ளி



நூற்றாண்டு விழாவை ஒட்டி இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி நடத்திய உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் சென்.பற்றிக்ஸ்-சென். கென்றிஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் சமநிலை உடைப்பு உதை மூலம் சென். கென்றிஸ் அணி வெற்றி பெற்றது. அதிபர், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுவிப்பாளருடன் வெற்றிபெற்ற அணி எடுத்துக்கொண்ட படம்.

கள் வழங்கப்படுகின்றன.

ஆயினும் மாகாணமட்டப் போட்டிகளே எமது வீரர்களுக்குக் கூடுதலாகக் கைகொடுக்கின்றன. அதிக சான்றிதழ்கள் மாகாண மட்டப் போட்டிகளிலேயே கிடைக்கின்றன. தேசிய மட்டப் போட்டிகளில் எமது வீரர்களுக்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. இதனால் அங்கு சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளது.

எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு, மாகாண மட்டப் போட்டிகளைக் கைவிடாமல் தேசி மட்டப் போட்டிகளைக் கூடிய விரைவில் நடத்தி அதன் மூலம் சிறந்த வீரர்களைத் தேசிய மட்டப் போட்டிகளுக்குக் கொண்டு செல்லவேண்டிய கடப்பாடு வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் அதிகாரிகளுக்கு உண்டு. அதனை அவர்கள் தட்டிக் கழித்துவிட முடியாது.

இதன்மூலம் வட மாகாண வீரர்கள் தேசிய மட்டத்தில் பிரகாசிக்க முடியும்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை பாடசாலை மட்டத்தில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிரிக்கெற், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும் தடகள விளையாட்டுக்களில் தற்போது கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுவருவது

**விண்ணன்**

ஒருவகையில் மகிழ்ச்சியளிக்கிறது. அந்த முன்னேற்றம் மாகாண மட்டப் போட்டிகளிலும் எதிரொலிக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் மிகுந்த அக்கறையுடனும் பொறுப்புணர்வுடனும் நடந்துகொள்ள வேண்டுமென கல்விமான்களும் பெற்றோர்களும் எதிர்பார்க்கிறார்கள். ✱

# வரணியில் ஓர் உள்ளூர் தொழிற்சாலை — பனை வளத்தை வீணாக்காமல் பெருமுயற்சி

உலகில் விஞ்ஞானம் அதி உச்ச நிலைக்கு வளர்ச்சி கண்டு விட்டது ஆனால் நாம் இன்னும் பின்தள்ளப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றோம்.

உற்பத்தி சார்ந்த கைத்தொழில்துறை எமது பிரதேசத்தில் அதம நிலையிலேயே உள்ளது. இப்போது நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது.

யாழ்ப்பாணம் பனை வளம் அதிகமாக உள்ள பிரதேசமாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுள் அதிகமானவை அழிக்கப்பட்டாலும் பயன்பாடு குறைவடையவில்லை. பனையில் இருந்து இன்றைய கால கட்டத்தில் அதிகமாகப் பெறப்படும் வளம் பனங்கள் ஆகும். இந்த பனங்கள் மேலதிகமாகப் பெறப்படும் காலங்களில், பதப்படுத்தி போத்தல்களில் அடைக்கப்பட்டு சேமிக்கப்படுகிறது.

பனங்கள் விற்பனை நிலையங்களில் தேங்கும் போது பனம் சாராயமாகக் காய்ச்சி வடித்தெடுக்கப்படுகின்றது.

இவ்வாறு தென்மராட்சிப் பிரதேசத்தில் கள் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களால் மேலதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட கள் சங்கங்கள் மூலம் பொதுமக்களுக்கு நாளாந்தம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. - இவற்றில் மீதியே சாராயமாக வடிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வரணி வடக்குப் பகுதியில் ஒரு சிறிய கிராமத்தில் ஓர் ஒதுக்குப் புறத்தில் நவீன வசதிகளோ, அடிப்படை வசதிகளோ இல்லாத நிலையில் ''பனஞ் சாராயம்'' உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்த பனஞ் சாராயம் தனியே சுத்தமான பனங்கள்ளிலிருந்து உரிய முறைப்படி குறைந்தளவு வளங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்த நிலையத்தில் வடிசாலை முகாமையாளர் பொ.முத்துக்கிருஸ்ணன் என்பவர் முழுப் பகுதியையும் திட்டமிட்டு குறைந்தளவு ஆளணியினருடன் திறமையாக செயற்படுத்தி வருகின்றார்.

1990 காலப் பகுதியில் சிறிய அளவிலான ஒரு தொகுதியில் இந்த நிலையம் இயங்கியது 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைதடியில் நவீல்ட் பாடசாலை வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வடிசாலை அமைக்கப்பட்டு இயங்கியது.

**இராணுவ நடவடிக்கையால் மூடப்பட்டது**

இந்த நிலையம் 2000 ஆம் ஆண்டு இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் முற்றாக சேதமடைந்து அழிவுற்றது. இதனால் சங்கத்திற்கு பாரிய நட்டம் ஏற்பட்டது.

மீளவும் தற்பொழுது இயங்கும் நிலையம் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் சிறிய பொறித் தொகுதியுடன் இயங்கி சேவை புரிந்து வருகிறது. சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்



கங்களின் கொத்தணி நிலையத்திற்கு வருடாந்தம் நல்ல வருமானத்தை ஈட்டிக் கொடுப்பது குறிப்பிடத்தக்கது.

வரணி வடக்கில் அமைந்துள்ள வடிசாலை கொடிகாமம், பருத்தித்துறை வீதியில் பிரதான வீதியில் இருந்து சுமார் 11/2 கிலோ மீற்றர் தொலைவில் வீதியின் கிழக்குப்புறமாக அமைந்துள்ளது. பொதுமக்கள் குடியிருப்பு குறைவான வயற்கரையோரமாக அமைந்துள்ளது.

**வடிசாலைக்கு கள்**

இந்த வடிசாலை சாவகச்சேரி - கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் கீழ் இயங்கி வரும் நிலையமாகும். எனவே வடிசாலைக்கு தேவையான கள்ளினை சாவகச்சேரி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்திடமும், கொடிகாமம் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்திடமும் பெறப்படுகிறது. நாளாந்தம் 6000 போத்தல் கள் வடிசாலைக்கு கொண்டு வரப்படுகிறது. பெரிய கொள்கலன்களில் நிரப்பப்பட்டு உழவு இயந்திரங்கள் மூலம் வடிசாலைக்கு கள் எடுத்து வரப்படுகிறது. இது கிளைத் தவறணைகளில் பாவனையாளர்களுக்கு வழங்கி மீதியாக இருப்பது சேர்க்கப்பட்டு வடிசாலைக்கு அனுப்பப்படுகிறது.

**பனங்கள் சீசன்**

பனங்கள் 'சீசன்' ஆறுமாதகாலத்திற்கு மட்டுமே நீடிக்கும்.

இந்த 6 மாத காலத்தில் பெறப்பட்ட கள் - மதுபான (ஸ்பிறிற்) ஆக வடிக்கப்பட்டு இருப்பில் வைக்கப்பட்டு பின்னர் படிப்படியாக சாராயமாக மாற்றப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்படுகிறது.

**பொறி முறை மூலம் மதுசாரம்**

வடிசாலைக்கு எடுத்து வரப்பட்ட கள் அதன் செறிவு- மானி மூலம் பார்க்கப்பட்டு கணிப்பிடப்படுகிறது. செறிவானது கள்ளின் தன்மையில் 4.5% காணப்படல் வேண்டும்.

பொறித் தொகுதியில் உள்ள தொட்டிக்கு நீர் இறைக்கும் இயந்திர மூலம் அனுப்பப்படுகிறது. கொதி நிலையில் ஆவியாக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு மதுசாரம் 78% செறிவில் வடிக்கப்படுகிறது. கள்- 1500போத்தல் கள்ளில் 78% செறிவில் 86 போத்தல் மதுசாரம் ஒரு தடவையில் பெறப்படுகிறது. இவ்வாறு நாளொன்றில் 4 தடவை 344 போத்தல் மதுசாரம் பெறப்படுகிறது.

**மதுசாரம் அடைப்பு**

344 போத்தல் மதுசாரத்தில் 682 போத்தல் சாராயம் நாளாந்தம் முறையாக வடித்து அடைக்கப்படுகிறது. இது 33.5% செறிவில் குடிக்கும் சாராயமாக அடைக்கப்படுகிறது. மதுசார வீதம் பார்ப்பதற்கான மானி அங்கு காணப்படுகிறது. சாராயம் சரியான விகிதாசாரம் பார்க்கப்பட்டு போத்தல்களில் அடைக்கப்படுகிறது.

**வடிசாலைக்கான தண்ணீர்**

வடிசாலையில் சாராயம் வடிப்பதற்கான தண்ணீர் கல்சியம் படிவுகள் இல்லாத நல்ல நீர் தேவை என நல்ல தண்ணீரை வடிசாலையில் இருந்து 10 கி.மீற்றர் தொலைவில் உள்ள வேம்பிராயில் இருந்து நாளாந்தம் உழவு இயந்திரத்தில் கொள்கலன்களில் பெறப்படுகிறது. இவை சுத்திகரிக்கப்பட்டு பாவனைக்கு எடுக்கப்படுகிறது.

**வடிசாலைக் கழிவு**

வடிசாலையில் சாராயம் வடித்து மீதியாக பெறப்படும் கழிவு நீர் 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒரு கிலோ மீற்றர் தூரம் பைப் பொருத்தப்பட்டு அருகில் உள்ள பற்றைக் காட்டில் விடப்பட்டு வந்தது. இந்தப் பைப்புக்கள் விசமிகளால் இடப்பெயர்வு காலத்தில் களவாடப்பட்டு விட்டது.

**பசளைத் தன்மை கொண்ட கழிவு**

இதனால் தற்பொழுது இந்தக் கழிவுப் பொருள் வடிசாலையின் பின்புறமாக குழி தோண்டப்பட்டு அதனுள் நிரப்பப்படுகிறது. நிரப்பும் கழிவுகள் கொள்கலனில் நிரப்பப்பட்டு பற்றைக் காட்டில் பொதுமக்கள் இல்லாத பகுதியில் கொட்டப்படுகிறது. இந்த கழிவு நீரினால் சூழல் மாசடையும் தன்மை இல்லையென பரீட்சிக்கப்பட்டதுடன் இந்த கழிவு நீர் நெல் வயலுக்கு நல்ல பசளைத் தன்மை கொண்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அந்தப் பகுதி விவசாயிகள்

**த.அருணன்**

இதனை கொள்கலனில் ஏற்றி தமது வயல்களுக்கு உரமாக பாவித்து வருவதாகவும் அதன் முகாமையாளர் பொ.முத்துக் கிருஷ்ணன் தெரிவித்தார். இது ஊற்றப்படுவதால் வயலில் புல் வகை முளைக்கும் தன்மை குறைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**வடித்தலுக்கு விறகு**

மதுசாரம் வடிப்பதற்கு வெப்பத்திற்கு விறகு பாவிக்கப்படுகிறது. இது மிகவும் முக்கியமான தென்றாகும். இதற்காக வடிசாலையில் விறகுக் கொள்வனவுக்காக ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். 6000 போத்தல் கள் நாளொன்றுக்கு மதுசாரமாக வடிக்கப்படுவதால் - அதற்கு 5 தூக்கு விறகு தேவைப்படுகின்றது. ஒரு தூக்கு விறகு 400 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படுகிறது. வரணி வடிசாலையில் ஊழியர்கள் குறைவாக காணப்படுகின்ற போதிலும் அங்கு 24 மணித்தியாலமும் தொடர்ச்சியாக சாராய உற்பத்தி சுழற்சி முறையில் ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் பணி புரிந்து வருவது பாராட்டுதலுக்குரிய விடயமாகும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தை வளர்ப்பதில் சுவிற்சர்லாந்து வாழ் தமிழர்களுக்கு எங்களைவிட அதிக ஆர்வம்!

இலங்கையிலிருந்து சென்று சுவிற்சர்லாந்தில் குடியேறியுள்ள இந்து மதத்தவர்கள் சைவசமய கிரியைகள், தத்துவங்கள், கலாசாரம், பண்பாடு முதலியவற்றைத் தமது பிள்ளைகளும் பின்பற்றவேண்டும் என்பதில் மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள். பிள்ளைகளிடம் எமது சமயம் தொடர்பான அறிவை வளர்ப்பதில் அக்கறை கொள்கிறார்கள். எமது நாட்டில் சைவர்கள் தமது சமய வளர்ச்சியில் கொள்ளாத அளவு அக்கறையை அவர்கள் கொண்டுள்ளது குறித்து நான் மகிழ்ச்சியடைந்தேன்.

அண்மையில் சுவிற்சர்லாந்தின் தலைநகர் சூரிச் நகரில் நடைபெற்ற உலக சைவப் பேரவையின் 11ஆவது உலக சைவ மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு திரும்பியுள்ள நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் இவ்வாறு 'உதயன்' நிருபருக்குத் தெரிவித்தார்.

சுவிற்சர்லாந்தில் நடைபெற்ற உலக சைவ மாநாட்டின் நோக்கங்கள்பற்றி சுவாமிகள் விளக்குகையில்:



உலகச் சைவ' மாநாட்டில் நல்லை ஆதீன முதல்வர் உரையாற்றுகிறார். அருகில் தமிழகத்தைச் சேர்ந்த மடாதிபதி ஒருவரும் பெரிய புராணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த வண.பிதா அலஸ்ரெயர் மக்கிளஷனும் காணப்படுகின்றனர்.

'அன்பே சிவம்' என்பது நடைமுறையில் உலகளாவிய ரீதியில் செயற்படுத்தப்படவேண்டும். நந்திக்கொடி தர்மத்தை விளக்குவது. உலகம் முழுவதும் தர்மம் நிலைக்க வேண்டும் என்பதே மாநாட்டின் முக்கிய குறிக்கோளாகும். இம்முறை இடம்பெற்ற மாநாடு 'சைவம்வேற்றுமையில் ஒற்றுமை' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டிருந்தது என்றார்.


சூரிச் மாகாண அமைச்சர்

மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் சைவ சமயம் காட்டும் வாழ்வியல் நெறி முறைகள், அதனால் மனித குலத்திற்குக் கிடைக்கக்கூடிய உன்னதங்கள் குறித்து தெளிவான சிந்தனை கொண்டவர்களாகக் காணப்பட்டனர். ஈழத்தமிழர் பிரதிநிதிகள் உட்பட இந்தியா, கனடா, லண்டன், சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, தென்அமெரிக்கா போன்ற நாடுகளைச் சேர்ந்த சுமார் 500 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

**பிறமதத் தலைவர்கள்**

பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத் தலைவர்கள் முதல் நாளன்று கலந்துகொண்டனர். அன்றைய தினம் அந்த நாட்டின் அமைதிக்கான பிரார்த்தனைகள் இடம்பெற்றது. இதில் பல்வேறு மதப் பெரியார்கள் கலந்துகொண்டனர். மாநாடு நடைபெற்றதே ஒரு கத்தோலிக்க தேவாலய மண்டபத்தில்தான்.

**32 வருடங்களாக யாகம் செய்யும் மக்கள்**

அங்குள்ள அநேகர் சைவ சமயத்தில் இணைந்து கொண்டிருக்கிறார்கள். கடந்த 32 வருடங்களாகத் தொடர்ச்சியாக யாகம் செய்துகொண்டிருக்கும் சுவிஸ் மக்களைக் காணக்கூடியதாக இருந்தது.

## 'சூரிச்' சைவ மாநாட்டில் கலந்துகொண்டு திரும்பியுள்ள நல்லை முதல்வர் சொல்கிறார்

பிள்ளைகள் தமது பெற்றோர்களின் வழிகாட்டலில் சமய அறிவைப் பெறுவதில் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். நிகழ்வில் கலந்துகொண்ட பிள்ளைகள் பெரும்பாலும் எமது கலாசாரம், பண்பாடுகளைப் பேணும் வகையிலேயே வந்திருந்தனர். வழிபாட்டு முறைகள், சமய அறிவுப் போட்டிகளில் பலர் ஈடுபாடு கொண்டிருந்தது எதிர்காலத்தில் நல்ல சைவப் பாரம்பரியம் உருவாகும் என்ற நம்பிக்கையைத் தந்தது.

**பெரியபுராணத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு**

பெரியபுராணத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல் வெளியிடப்பட்டது மாநாட்டின் ஒரு சிறப்பு அம்சமாகும். கிறிஸ்தவ பாதிரியாரான அலஸ்ரெயர் மக்கிளஷன் (ALASTAIR MAGLASHAN) அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

நாயன்மார்களின் இறை அர்ப்பணிப்பின் மகத்துவத்தை மேற்குலக மக்கள் அறியவேண்டும் என்ற ஆர்வத்தினாலேயே சேக்கிழார் பெருமானின் சைவ நாயன்மார்களின் வரலாற்று காப்பியமான பெரியபுராணத்தை மொழிபெயர்த்ததாக பிரிட்டனைச் சேர்ந்த அந்தப் பாதிரியார் எங்களிடம் தெரிவித்தார்.

அவருக்கு சிவத்தொண்டன் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

**சூரிச் மாகாண அமைச்சர் கலந்துகொண்டார்**

மாநாட்டில் சூரிச் மாகாண அமைச்சர் கலந்துகொண்டு சிறப்பித்தார். உலக் சைவப் பேரவையின் தலைவர் யோகானந்த அடிகள், செயலாளர் கலாநிதி சண்.ஏ. சண்முகவடிவேல் உட்பட உலகெங்கும் உள்ள அதன் கிளை உறுப்பினர்கள் எமது சமய வளர்ச்சிக்காக மேற்கொள்ளும் பெரும் பணிகளுக்காக அவர்களுக்கு


மாநாட்டையொட்டி இடம்பெற்ற நடராஜர் திருஉலாவின்போது...

எமது சைவப் பெருமக்கள் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதுடன் புலம்பெயர்ந்த மக்கள் தாம் வாழும் நாடுகளில் எமது சமய வளர்ச்சிக்காக பணியாற்றுவது போன்று இங்குள்ளவர்களும் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்த வேண்டும் என விரும்புகிறேன்.


-இவ்வாறு சுவாமிகள் தெரிவித்தார்.

**சந்திப்பு: லக்ஷ்மன்**

---

# போசாக்கு நிறைந்த உணவு வகையும் கிரமமான வைத்திய பரிசோதனையும் ஆரோக்கியமான தாய்மைக்கு....

தாய்மை என்பது ஒரு பெண்ணுக்குத் தனது வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய அதி உயர்ந்த நிலையாகும். இதனைப் பாதுகாப்பது நம் அனைவரினதும் கடமையாகும். ஒரு பெண் தாய்மைப் பேற்றினை அடைந்து ஓர் ஆரோக்கியமான குழந்தையினைப் பெற்றெடுக்கும் வரை பலவிதமான சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. பிறக்கும் குழந்தையின் உடல், உள, சமூக புத்திக் கூர்மை வளர்ச்சி அதிகூடிய அளவு இடம் பெற தாய்மை நல்ல நிலைமையில் இருப்பது மிக மிக அவசியமாகும். வாழ்க்கையில் ஒவ்வொரு குழந்தைக்கும் ஆரோக்கியமான ஆரம்பம் கிடைக்கவேண்டுமானால் தாய்மாரின் போஷாக்கு நிலைமையைச் செம்மையாக்குதல் முக்கியமாகும். தாய்மார் தமது சொந்த ஆரோக்கியத்தின் பொருட்டும் தமது




குழந்தையின் ஆரோக்கியத்தின் பொருட்டும் கர்ப்பமுற்றிருக்கும் காலத்தில் கூடுதலாக உண்பதும், குறைவாகச் சக்தியைச் செலவிடுவதும் அவசியம். கர்ப்பமுற்றிருக்கும் பருவத்தில் போதுமான நிறை அதிகரிப்பும், பாலூட்டும் காலத்தில் சத்துள்ள ஆகாரங்களும் முக்கியமென்பதைக் குடும்ப உறுப்பினர்கள் விளங்கிக் கொண்டார்களானால், நிறை குறைந்த குழந்தை பிறக்கும் அபாயத்தை விலக்கவும், தாயின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், பாலூட்டுதலை வெற்றிகரமாக்கவும் அவர்கள் நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருக்கும்.

**போஷணை**

கர்ப்பகாலத்திலே போதியளவு போஷாக்கு உள்ள உணவுகளை உள்ளெடுக்காவிடின், பிறக்கப்போகின்ற குழந்தை, பிறப்பு நிறை குறைவாகப் பிறப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. அல்லது பிள்ளை இறக்கவும் கூடும். குழந்தை உயிர் பிழைக்குமாயின், சாதாரண வளர்ச்சி வீதத்தினை இவர்களால் எட்டமுடியாது காணப்படுவதோடு, இவர்களின் மூளை வளர்ச்சியும் குறைவடைந்து புத்திகூர்மை, விவேகம், கல்வி கற்கும் திறன் என்பன பாதிக்கப்படும். ஆகவே தாய்மைப்பேறு அடையவிருக்கும் பெண்கள் சாதாரண கர்ப்பகாலத்தையும், பாதுகாப்பான பிர



சவத்தையும், ஆரோக்கியமான குழந்தையையும் பெற்றெடுப்பதை உறுதிப்படுத்துவதற்கான சில வழிவகைகள் பற்றி விரிவாக ஆராய்வோம்.

கர்ப்பகாலத்தில் போஷணை, பராமரிப்பு என்பவற்றைச் செம்மையுறச் செய்வதற்கான வழிமுறைகளைப் பற்றி ஆராய்வோமானால், சில முக்கிய விடயங்களைக் கர்ப்பிணித் தாய் கடைப்பிடிக்கவேண்டும். அவையாவன:

★ கர்ப்பமுற்றிருக்கும் தாயானவர், கர்ப்பகாலத்தில் போதியளவு போஷாக்குள்ள உணவுகளை முன்னைவிட அளவிலும் கூடுதலான அளவு உட்கொள்ள வேண்டும்.

★ முடியுமானால் மேலதிகமாக ஒரு முறை உணவு உட்கொள்ளலாம்.

★ ஓர் ஆரோக்கியமான குழந்தையினைப் பெற்றெடுக்க வேண்டுமாயின் கர்ப்பமுற்றிருக்கும் வேளையில், தாயின் உடல் நிறை சாதாரண உடல் நிறையினை விட 10 - 12 கிலோகிராம் வரை அதிகரிக்க வேண்டும்.

★ இதனை அடைவதற்காக தாய் தினமும் மூன்று வேளை மாத்திரம் உண்ணாது அடிக்கடி உணவு உட்கொள்ளவேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் போஷணையானது தாயினதும் பிறக்க இருக்கும் குழந்தையினதும், தேவையினைப் பூர்த்தி செய்யப்போதுமானதாக இருக்கவேண்டும். இந்த இலக்கினை அடைவதற்கு ஊடகங்களிலே விளம்பரப்படுத்தப்படுகின்ற விலை கூடிய உணவுப் பண்டங்களைத்தான் உட்கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. உள்நாட்டிலே இலகுவாகக் கிடைக்கின்ற உணவு வகைகளான அரிசி, பருப்பு, பயறு, சோயா, கிழங்கு வகை, பால், கடும்பச்சை கடும் மஞ்சள் மரக்கறிகள், இலைக்கறி வகைகள் போன்றவை போதுமானவையாகும். உணவின் தரத்தினை அதிகரித்துக் கொள்வதற்காகவும் இரும்புச் சத்தினைப் பெற்றுக்கொள்வதற்காகவும் மீன், முட்டை, இறைச்சி போன்றவற்றை உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

கர்ப்பம் தரித்த முதல் மூன்று மாதங்களுக்குள் உணவில் வெறுப்பு, வாந்தி ஏற்படுவது இயற்கையாகும். ஆனால், போதிய உணவை உட்கொள்ளாதவிடத்து இரைப்பையில் அமில அமுற்சி உண்டாகலாம். அதற்காக அடிக்கடி பிஸ்கெற் போன்ற உணவுடன் சாயம் குறைவுள்ள பால் அருந்துவது நல்லது. அதிக புளிப்புள்ள, அதிக மசாலா சேர்த்த உணவுகளைக் குறைத்துக் கொள்வது நல்லது. அதிகளவு தண்ணீர் குடித்தல் அவசியம். அத்துடன் கிளினிக் குகளில் வழங்கப்படுகின்ற குறைநிரப்பு உணவான திரிபோஷாவும் கர்ப்பிணித் தாயின் போஷாக்கின் தரத்தினை அதிகரிக்கின்றது.

**அயடீன்**

உணவு தயாரிப்பதற்கு அயடின் கலந்த உப்பைப் பயன்படுத்தவும். அயடின் குறைபாடினால் வெளிப்படையாகத் தென்படக் கூடிய ஒரேயொரு அறிகுறி கழலை எனப்படும் கழுத்தின் கீழ் உள்ள தைரொயிட் சுரப்பியின் வீக்கமாகும். கர்ப்பகாலத்தில் அயடின் குறைபாடு இருப்பின் உடல், உளரீதியில் போதியளவு விருத்தியடையாத ஒரு குழந்தையைப் பெறும் சாத்தியக் கூறுகள் அதிகம். அயடின் குறைபாடு உங்கள் பிள்ளையின் கல்வி கற்கும் ஆற்றலைப் பாதிக்கும். எனவே உங்கள் உணவிலே அயடின் கலந்த உப்பைச் சேர்த்து, உங்களதும் உங்கள் குழந்தையினதும் உடல் நலத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

**கிரமமான வைத்தியப் பரிசோதனை:**

கர்ப்பிணித் தாய்மார்கள் கிரமமாக சிகிச்சை நிலையத்திற்குச் சென்று தம்மை சோதித்துக் கொள்வது அவசியமாகும். கர்ப்பம் தரித்து 8 வாரங்களில் கிளினிக்குக்கு செல்வதோடு, வைத்தியப் பரிசோதனையின் போது மாதாந்தம் ஒழுங்காக செல்வதும் அவசியமாகும். வைத்தியப் பரிசோதனையின் போது உடல்நிறை, குருதியமுக்கம், சிறுநீர் போன்றவற்றை அடிக்கடி ஒழுங்கு முறைக்கேற்ப பரிசீலனை செய்துகொள்வதனால் கர்ப்பிணித் தாயினதும் பிறக்கவிருக்கும் குழந்தையினதும் போஷணை மட்டம் அதிகரிக்கும். நீங்கள் வைத்தியப் பரிசோதனைக்குச் செல்லும் வேளைகளில் உங்கள் உடல் நிறை, குருதி அமுக்கம் பற்றி உங்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களை வைத்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்த்துக் கொள்வதோடு, போஷாக்கு சம்பந்தமான அறிவுரைகளையும் பெற்றுக்கொள்ளலாம். அத்தோடு கர்ப்பகாலத்திலே வழங்கப்படுகின்ற தடுப்பூசி மருந்துகளை கிரமமான முறையில் பெற்றுக்கொள்ளுதலானது குழந்தையை,

★ ஏற்புவலி ★ தொண்டைக்கரப்பன்
★ குக்கல் ★ போலியோ
★ காசம் ★ ஜேர்மன் சின்னமுத்து
★ அம்மை ★ கூகைக்கட்டு

போன்ற நோய்களிலிருந்து பாதுகாக்கலாம். இவ்வாறு நீங்கள் செய்வதனால் கர்ப்பகாலத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்வதோடு, சுகமான ஓர் பிரசவத்தினையும் ஆயத்தப்படுத்தலாம்.

**செல்வி றமாஜினி மோகனதாஸ்**
25ஆம் அணி, சமுதாய மருத்துவதுறை,
மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 02.06.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் சுப்பையா தியாகராசா**

(துரை)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.07.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (கனடாவில்) நடைபெறும். அதையிட்டு நாளை (02.07.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் கொக்குவில் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

றெயில் றோட்,
கொக்குவில்
(சி/52792)

**தி.பாலகுமார்**
(இலங்கை வங்கி, காங்கேசன்துறை ),
**குடும்பத்தினர்.**

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 - 11 - 1934



உதிர்வு 01 - 07 - 2006

**அமரர் முருகன் கிருஷ்ணன்**

(ஓய்வுபெற்ற அதிபர் - யா/ஊரி அ.மி.த.க. வித்தியாலயம்)

கனவோ! இது நனவோ!
நம்ப முடியவில்லை ஐயா உமது இழப்பை
காலம் உருண்டோடி
ஆண்டொன்று ஆகிவிட்டது!
காணவில்லை உம் முகத்தை
தேடுகிறோம் நாம் பகல் இரவாய்.

இன்று (01.07.2007) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நன்றி ஆராதனையிலும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாலாவோடை,
காரைநகர். (61947)

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## வீடு விற்பனைக்கு

அமைதியான, பாதுகாப்பான சூழலில் உள்ள நவீன தொடர் மாடியில் 3 Room, 2 B/Room வீடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: Mr. C.CLINTON,
/32, PRAZER AVENUE, DEHIWALA.
(சி/52774) T.P.: 0785436480, 0786168169

## இறைச்சிக்கோழி விற்பனை

இறைச்சிக்கோழி புறொயிலர் (உயிர்) விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: (62318)
இல.15, 6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

## புறொயிலர் குஞ்சு விற்பனைக்கு

இன்று (01.07.2007) ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் புறொயிலர் குஞ்சு பெற்றுக்கொள்ளலாம்.
54, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை. 8485
(62339)

## வீடு வாடகைக்கு

மருத்துவபீடத்துக்கு முன்னால் 3 அறை வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 17/3, கோணாவளை ஒழுங்கை, கொக்குவில்.
T.P.: 0777 732863
(62333)

## தேவை

* தொலைபேசி இயக்குநர்
* இலத்திரனியல் உதிரிப்பாக விற்பனையாளர்

பருத்தித்துறை நகர எல்லைக்கு உட்பட்டவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: **பிரகாஷ் எலக்ரோனிக்ஸ்,** பஸ் நிலையம், பருத்தித்துறை.
(62319)

## மணமகள் தேவை

Australia Residence, Ceylon Tamil, வயது 31, உயரம் 5' 9'', B.Com. (Special) பட்டதாரி, கணக்காளர் மகனுக்கு தாயார் 30 வயதுக்குட்பட்ட பெண்ணைத் தேடுகின்றார்.
தொடர்பு: T.P.: 0061431739974,
0112930406, 0777 666981
Email: proposalan@yahoo.com
(சி/52784)

## சேவை அறிவித்தல்

1. அரைக்கும் ஆலை
   1. சஅரிசி மா வறுத்தல் 10/=
   (உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்)
   * அனைத்து வகையான அரைத்தல் வேலைகள்
2. சுத்திகரிப்பு நிலையம்
   1. மோட்டார் சைக்கிள் 250/=
   * Prima Broiler- 650/- (1kg)

(62345)

தொடர்பு: **பிருந்தா மில்ஸ்**
இல.18, நக்கா றோட், யாழ்ப்பாணம். தொ.பே: 5745

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இலக்கம் 342, K.K.S வீதியில் அமைந்த மாடிக்கட்டடமும், அதனுடன் இணைந்த கட்டடம், ஒரு கிணறு, கஸ்தூரியார் வீதிக்கு பின்புறப் பாதையும் 14.07 குழி பரப்பளவும் கொண்ட வியாபார நிலையம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 011 2399348. (சி/52757)

## Beauty Centre



மணப்பெண் அலங்காரம்

Facial, Eyebrow, Threading, Waxing, Hair Style, Bridel dressing செய்யப்படும்

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

★ சிங்கள மொழி ஆரம்பம் முதல் கற்பிக்கப்படும்.

588/8, நாவலர் வீதி,
(ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை),
யாழ்ப்பாணம்,
திருமதி பிரமிளா சஜித்குமாரன்
T.P. No.: 021 222 6453
Mobile No.:077 5205469
(62306)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 01 ✱ 01 ✱ 1930



ஆண்டவன் அடியில் 11 ✱ 07 ✱ 2006

**அமரர் செல்லையா செல்வரத்தினம்**

(ஓய்வுபெற்ற பிரதேசக் கணக்காய்வாளர்)

திதி: 01.07.2007 பிரதமை


ஆண்டு ஒன்று சென்றாலும், அப்பா!
ஆறவில்லை எம் நெஞ்சம்
உங்களது பாசக் கடலிலே எங்களை
மகிழ்ச்சியாக வைத்திருந்தீர்கள் அந்த
நினைவோடு என்றும் வாழுகின்றோம்.
உங்களது ஆத்மா சாந்திபெற
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சிவன் வீதி,
ஆவரங்கால்,
புத்தூர்.

தகவல்:
**திருமதி கனகசபாபதி.**
(62288)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# BE A DOCTOR




**Recognized by SRI LANKA MEDICAL COUNCIL**

உள்நுழையும் விசா அனுமதி உத்தரவாதம் அழைப்புக் கடிதம், அனுசரணைக் கடிதங்கள், வங்கி கணக்குக் கூற்றுவிசா நேர்முகப் பரீட்சை எவையும் அவசியமில்லை.

* **PATHE ACADEMY** அனுமதிக்கு விண்ணப்பித்த நாளிலிருந்து 20 நாட்களுக்குள் கற்கை நெறி அனுமதியும் விசா அனுமதியும் பெற்றுத் தரப்படும்.
* கல்விக்கான கடன் வசதி 5 நாட்களுக்குள் ஒழுங்கு செய்து தரப்படும்.
* தங்குமிட வசதி, இணையத்தள வசதி, பொழுது போக்கு வசதி, நூலக, ஆய்வுகூட வசதிகள், செயல்முறைக் கல்வி மற்றும் பரீட்சைக் கட்டணம் யாவும் இலவசம்.
* போக்குவரத்து, உணவு கட்டணங்கள் விஷேட சலுகை அடிப்படையில்.
* இலங்கையிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் 200க்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் தொழில் பார்த்தவாறே கற்கை நெறியை மேற்கொண்டு வருகின்றனர்.
* இலங்கையர்களான **Vitebsk** பிரதிநிதிகள் உங்களுக்கு உதவவென 24 மணிநேரமும் காத்திருக்கின்றனர்.
* பிரிட்டன், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜேர்மனி மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உட்பட உலகின் ஏனைய பல நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்டது.
* ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பருவகால விடுமுறை வேளையில் சென்று பகுதி நேர தொழில் பார்க்கும் வாய்ப்பு.
* பட்டம் பெற்ற பின்னர் ஐரோப்பாவில் குடியேற வாய்ப்பு.
* வருடாந்த கட்டணம் இரு தவணைகளில் செலுத்தும் வாய்ப்பு.

**PATHE ACADEMY** மூலம் அனுமதி பெற்ற மாணவர்கள் விபரம், ஏனைய தகவல்களை எமது இணையத்தள முகவரியிலும் அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**Engineering / IT / Other Courses also available**

இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்! உடன் பயணம்!
அனுமதிக்கும் மேலதிக தொடர்புகளுக்கும் தமிழில் தொடர்பு கொள்ள: 0773017883

தற்போது 0% வட்டி தவணைத் திட்டமானது பிரதான கிரெடிட் அட்டைகள் மூலமாக.
**Transfer from other Universities**
**Apply before 20th August to Join September semester**

**PATHE ACADEMY**
The Leader of Medical Education
Overseas Student Placement Department
37, School Lane(Entrance from Duplication Rd.) Colombo 03.
Tel:5377752, 2502012, 2591271. www.patheacademy.org
(C/52741)

THE HALO TRUST

# Vacancy for The Post of Office Manager

The Halo Trust invites the suitable Candidates for the above position
The Applicant should have the following qualifications:

- Good interpersonal and liaison skills with an Excellent command of written and spoken English & Tamil.
- Ability to work independently using own initiative within the scope of responsibilities.
- Age should be between 25 to 45
- Analytical skills and proven experience in Management, Financial Management, Knowledge of stores & Computer literacy in Microsoft Office.
- Previous experience required preferably with Local NGOs or international NGOs

Base station: Jaffna.
Salary: Negotiable.

Please send your bio data with contact Telephone Numbers on or before 6th of July 2007.

To: **The Program Manager**
**The HALO Trust**
**No.12 Nallur Cross Road,**
**Nullur, Jaffna.**

(62342)

*The applied position should be indidcated on the top left hand corner of the Envelop.*

**Land O'Lakes**
INTERNATIONAL DEVELOPMENT

**Land O'Lakes Dairy Development Lanka,** funded by USDA, is accepting applications for the following position to assist in our dairy development program in Jaffna District. Position duration is one year period with option to extend through year two based on satisfactory performance.

**Extension Agents** will be responsible for providing technical assistant to targeted dairy farmers in Jaffna District. The overall objection is to improve targeted Jaffna District farmer's livestock management skills and thus increasing quality and quantity of milk production. The position requires regular field visits to farmer beneficiaries as well as office based training sessions.

**Qualifications:**

1. Must be independent and self motivated
2. Must have interest in Animal Husbandry and desire to work with farmers
3. Must have motorcycle license and willing to travel daily to farm sites
4. Preferably education in Bio-Science or Dip. in Agriculture/ Animal Husbandry is an advantage

**How to apply:**

Please send a letter of interest and detailed CV with salary requirements to: Assistant Director North, Department of AP&H, 280, Palaly Road, Kandarmadam. Only candidates with relevant experience and qualified educational backgrounds in above position should apply. Suitable candidates from all the divisions are encouraged to apply. The deadline for application is Friday 5pm July 6.
Please give the job applied for in the left hand corner of the envelope. (62280)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் தமிழ் இலக்கியத்துறையில் மூத்தவர்களில் முதன்மை வரிசையில் வைத்து எண்ணப்படும் எழுத்தாளர் டொமினிக் ஜீவா.

மக்களோடு சம்பந்தப்பட்டவை, சம்பந்தப்படுபவை, அனைத்துமே சுவை நிரம்பியவை - ரசனை கொண்டவை என்ற - நிலைப்பாட்டுடன் இலக்கியம் படைத் தவர் அவர்.

பல போராட்டங்களுக்கு மத்தியில் அனுபவ பூர்வமாக வந்த முடிவுகளின் பெறு பேறுகளே தமது எழுத்துக்கள் என்று அவர் கூறுவதுண்டு. தமது எழுத் துக்கள் ஊடாக முற்போக்குக் கருத்துக்களை பரவலாக்கிய ஈழத்து முன்னோடி எழுத்தாளர்களில் முக்கிய இடம்பெற்றவர். எம் மத்தியில் நிலவிய சமுகக் கொடுமை களை ஒழிக்கத் தமது எழுத்தைக் கருவியாக்கிய பேனா வீரன்.

''மல்லிகை'' மாத இதழைத் தொடர்ந்து கடந்த நாற் பது வருடங்களுக்கு மேலாக வெளியிட்டு வரும் சாதனை யாளன். அதன் ஊடாகப் புதிய எழுத்தாளர்களை உரு வாக் கிய பத்திரிகை ஆசிரியர்.

கடந்த 27.06.2007 அன்று 80ஆவது அகவை கண்ட இலக்கியப் படைப்பாளி அவர்.

அவரது அமுத விழாக் காலத்தில் அவரைக் கௌர விக்குமுகமாக நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் அவர் எழுதிய, பழைய யாழ்ப்பாணத்தைப் படம் பிடித்துக் காட்டும் ''நகரத்தின் நிழல்'' என்ற சிறுகதையை இங்கு வெளியிடுகிறோம். அவரது இலக்கியத் தொண்டு தொடர்க.



# நகரத்தின் நிழல்

இப்பொழுதெல்லாம், யாழ்ப்பாண ரெயில்வே ஸ்ரேடசனில் திரு விழாக் கூட்டந்தான்.

' தினசரி இவ்வளவு சனக்கூட்டம் எங்கே போகின்றதோ? எங் கிருந்து வருகின்றதோ?'.

அந்த நெருக்குவாரக் கூட்டத்துடன் அள்ளுண்டு, எற்றுண்டு, வெளி யேறிய பொழுதுதான் சாவகாசமாக மூச்சுவிட முடிகின்றது.

தென்னோலைகளினால் அடைக்கப்பட்ட வேலிகளைக் கொண்ட யாழ்ப்பாண மாநகரம் அமைதியை இழந்து, இயந்திர வேகத்திற்குத் தன்னை ஈடுகொடுக்கும் கோலத்தை இங்குதான் பார்க்கலாம்.

எத்தனை எத்தனை விதமான டாக்ஸிக்காரர்கள்! அவற்றில் கூட முண் டியடித்துக் கொண்டு ஏறுவதிலேதான் எவ்வளவு வேகம்? பேரமாவது, மண்ணாவது! சிறு சக்கரப் பற்களின் சுழற்சியில் காசு காட்டும் அந்தச் சின்னஞ் சிறு வலதுகை இரும்புப் பெட்டியில் உள்ள நம்பிக்கைதான் என்ன?

முன்னரெல்லாம் ரிக்ஷாக்களும், குதிரை வண்டிகளும் தான் பிரயாணி களுக்கு ஒரேயொரு கதி. குதிரை வட்டிகளும் அந்தஸ்து வெளிச்சம் போடு பவர்களுக்குத்தான். மற்றும்படி என்னைப் போன்ற பிரயாணிகளுக்கு ரிக்ஷாவை விட்டால், நடராஜா சர்வீஸ்தான்.

என்ன இருந்தாலும் இந்த ரிக்ஷாக்காரர்களுடன் பேரம் பேசுவதில் இருக்கின்ற குஷி ஒன்று இருக்கின்றதே - அடாடா, அதை அனுபவித் துப் பார்த்தால்தான் அதன் ரஸனை விளங்கும்.

''ரெண்டு ரூபா தா, தம்பி!''

''என்ன உதிலை கிடக்கிற நல்லூருக்கே?''

''என்ன ராசா, நீ இப்படிச் சொல்லுறாய்? ஒருநாளும் ரிக்சோவிலை போகல்லையே....?

''உதுதான் கூலி?''

''ஏறு துரை; ஒண்டரை ரூபா தா! ம்... ஏறு''

''ஒரு ரூவா தான் தருவன்.''

''அதுக்கு வேறை ஆளைப் பார்.''

இப்படியான பேரப் பேச்சுக்கள் இப்பொழுது கிடையாது. 'பீம் பீம்' 'பூம் பூம்' என்ற கார்களின் 'ஹார்ன்' இரைச்சல்தான். மனிதக் குரல்களுக் குப் பதிலாக இயந்திரங்களின் உறுமல்.

டாக்ஸிகளைத் தாண்டியதும் ஒதுக்குப் புறமாக இரண்டு ரிக்ஷா வண்டிகள். நான் அங்கு நடையைக் கட்டுகின்றேன். என்னைக் கண்ட தும் சின்னட்டி, 'தம்பியே! போன கிழமையும் வந்தியளே! இங்கை ஆருக் காகிலும் சுகமில்லைக் கிகமில்லையே?'' என்று வாய் நிறையச் சிரித்து வரவேற்று, வாடிக்கைக்காரர் குந்தியிருக்கிற தும்பு மெத்தையைக் கையாள் தட்டிச் சுத்தம் செய்கிறான். ''ம்.... சரி; ஏறுங்கோவன் தம்பி.''

நான் ரிக்ஷாவில் ஏறிக் குந்துகிறேன். ''இல்லை சின்னட்டி, இங்கை ஒரு காணியிலை கரைச்சர். அதுதான் அடிக்கடி கொழும்பிலை இருந்து வரவேண்டி இருக்கு'' என்று அக்கறையுடன் சொல்லுகிறேன்.

சற்றுத் தூரத்தில் புத்தம் புது மோரிஸ் மைனர் வாகனத்தில் கதவுகளைத் திறந்துகொண்டு ஏறுகிறார், அமிர்தலிங்கம், அவரொரு பிரபலஸ்தர். என்னைத் தெரிந்திருந்தாலும் தெரியாதவரைப் போலக் காட்டிக் கொள் ளும் முகத்திருப்பம். ஏனென்றால் இந்த யந்திர யுகத்தில், மனிதனை மனிதன் இழுக்கும் ரிக்ஷாவில் நான் பிரயாணம் செய்வதையும் பார்த்து மனதிற்குள் என்னை வெறுத்து ஒதுக்கிக் கொண்டாரோ, என்னமோ! ஒரு வேளை, காட்டுமிராண்டி என்று என்னை எண்ணிக்கொண்டிருக்கலாம்.

அமிர்தலிங்கம் காருக்குள் ஏறி அமர்வதற்கு முன்னரே, சின்னட்டி, ஏர்க்காலைத் தாக்கி தூக்கி ரிக்ஷா வண்டியைச் சமநிலையில் நிமிர்திப் பிடித்து, இழுக்க ஆரம்பித்தான்.

கார்கள் குறுக்கும் மறுக்குமாக ஓடி, சின்னட்டியின் பொறுமையைச் சோதித்தன. கிடைத்த இடைவெளி யைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட அவர், வண்டிச் சில்லை வெட்டித் திருப்பி, தார் ரோட்டில் ரிக் ஷாவை ஏற்ற முயற்சித்தான்.

''டேய், மடையா! கார் வாறது பின்னாலை; தெரியலையா?''

சாரதி ஆசனத்தில் வீற்றிருந்த அமிர்தலிங்கம் ஐயா அவர்களுக் குக்கோபம்வந்துவிட்டது.அதனால்தான் சின்னட்டியின் மீது சீறி விழுகிறார்.

ரிக்ஷாவை ஒரு ஓரமாக ஒதுக் கிய சின்னட்டி, 'ப்பூ! இந்தக் கார்க் காறன்களுக்குப் புதுசாக் கொம்பு முளைச்சுக் கிடக்காக்கும்!'' என்று வாய்க்குள் முணுமுணுத்தப்படியே வண்டியை வேகமாக இழுக்கிறான்.

நடந்து செல்லும் பிரயாணி களைத் தாண்டிக்கொண்டு ரிக்ஷா வேகமாக முன்னேறுகிறது.

முன்னர் நிலையத்துக்கு முன் பக்கம் வரிசையாக இருந்த கடைக ளெல்லாம் புகையிரத நிலைய விஸ் தரிப்புத் திட்டத்தினால் தரைமட்ட மாகக் காட்சியளிக்கின்றன.

அன்று -

இந்த இடத்திலேதான் இருந்தது எவரெஸட் ஹோட்டல். ரெயில் வருகிற, போகிற நேரங்களில் நடக்கும் வியாபாரத்தில் ஒரு கம்பீரம் இருக்கும். எதிரே மலையாளத் தான் கடைச் சுவரிலேதான் ரீ கல் தியேட் டருக்கு வரவிருந்த பயங்கர இங்கிலீஸ் சீரியல் சண்டைப் படத்திற்கு விளம்பரம் ஒட்டியிருந்தது. அதைப் பார்த்ததும் எவரெஸ்ட் கடையில் ஒரு சினிமாப் பத்திரிகை வாங்கலாம் என்ற எண்ணம் என் மனில் நிழலா டியது. அதை வாங்கிக்கொண்டு, வீதியில் எறியப்பட்ட வாழைப்பழத் தோலை உண்ண விரைந்த தெருப்பொறுக்கி மாடொன்றுடன் மோதித் திரும்ப கைப்பெட்டியை இடது கைக்கு மாற்றியபொழுது...

''தம்பி...'' என்ற குரல் பின்னாலிருந்து கேட்டது.

திரும்பிப் பார்த்தேன்.

ஒரு கையால் ரிக்ஷாவின் ஏர்க்காலைத் தாங்கிய வண்ணம், மறு கையால் தன் முகத்தில் ஒட்டியிருக்கும் அழுக்கைப் பார்க்கிலும் அழுக்கு மிகுந்த சீலைத் துண்டினால், பசிக் களை இழையோடியிருக்கும் முகத் தில் சற்றே வேர்விடும் வியர்வைத் துளிகளை உரசித் துடைத்தவாறு, ''ரிக்சோவிலை ஏறுமன் தம்பி, நாள் கொண்டு போறன்'' என்று கேட்டான், சின்னட்டி.

நடுவயதைத் தாண்டி, குடும்ப பாரத்தால் நசியுண்டு பசியினால் உடல் உலர்த்தப்பட்டு, ரிக்ஷா இழுப் புத் தொழிலால் கூனிய முதுகுடன் அவன் காட்சி தந்தான்.

''வேண்டாம்; நான் நடந்து போயிடுவன்.''

''அதுக்கில்லை ராசா. எனக்கொண்டும் புழைப்பில்லை. விடியக் காத்தாலை ஏதோ குடுக்கிறதைக் குடுங்க... ஏறுங்க தம்பி'' என்று கொஞ்சு தலுடன் கெஞ்சினான்.

நான் அப்பொழுது இளமைத் துடிப்பின் இலட்சியவாதி மனிதன். மனிதனாக வாழவேண்டும். ஒரு மனிதன் ஏறிக்குந்தியிருக்க, இன் னொரு மனிதன் மாட்டைப்போல இழுப்பது அநாகரிகமானது. இழுப் பது மனிதப் பண்பையே வேரறுக்கும் தொழில். சமதர்மக் கொள்கை யில் ஒன்று ரிக்ஷாவில் ஏறமலிருப்பதும் என்ற நியதியைக் கெட்டியாக நம்பியிருந்தேன். அந்த மனிதாபிமான ஜீவகாருண்யப் பிரச்சினையை எத்தனை வார்த்தைகளினாலும் எந்த விதமான தன்மைகளில் சொன்னா லும் அவன் விளங்கிக் கொள்ள மாட்டான் என்றே பட்டது. நிலைமை சங் கடமானதுதான். பதிலொன்றும் சொல்லாமல், நான் சிங்கள பேக்கரியை யும் தாண்டி நடந்து கொண்டிருந்தேன்.

ஓட்டமான, விரைவைப் பெறாத வேகமாக நடையில் சின்னட்டி பின்னால் தொடர்ந்து வந்தான்.

''தம்பி, இஞ்சை பாரும்; ரெண்டுமூண்டு நாளாய்க் காய்ச்சலாலை நான் ரிக்சோவைக் கையால் தொடக் கூட இல்லை. இப்பிடிக் கிட்டடி இடத்துக் கெண்டாலும் போனாத்தான் வீட்டிலே சோத்துலை வைக்கலாம். உங்கட உழைப்பிலை இது பெரிய காசே? நானொண்டும் பேசல்லை. கொண்டு போய் விடுறன். ஏதோ பாத்துக் குடுக்கிறதை மனசு போலக் குடத்தாச் சரி'' என்று சொல்லி, ரோட்டில் சாக்கடையோரமாக ரிக்ஷாவை நம்பிக்கை யுடன் நிறுத்தினான்.

இரக்கத்தை யாசிக்கும் விழிகள்! பரிதாப உணர்வு நெஞ்சில் குடைந் தது. 'இரக்கம் என்பது கண்ணீர். ஒரு கணத்தின் வெடிப்பில் தோன்றி உலந்து விடுகின்றது. இரக்கத்திற்குப் பதிலாக வர்க்க ரீதியான இரத்ததான யாகம்தான் தொழிலாளிகளின் முழு வாழ்க்கையையுமே மாற்றியமைக் கும்' என்று நான் நம்பும் தத்துவ விளக்கத்தில் நம்பிக்கை இழக்கவில்லை.

கைப்பெட்டியைத் தெருவில் வைத்துவிட்டு, பைக்குள் கைவிட்டுத் துளாவினேன். நான் இன்னமும் யோசிப்பதாகவே அவன் நினைத்திருக்க வேண்டும். என் கருமித் தனம்தான் எனது தயக்கதிற்குக் காரணமாக இருந்திருக்கலாமென்று அவன் கற்பித்திருக்கவும் கூடும்.

''தம்பி, உங்களிட்ட நான் கூட எடுக்கவில்லை. ஐம்பேசேத்துக் காசுக்கு யோசிக்கிறியளே?'' - தன் மன வெதும்பலின் உஷ்ணத்தை மூச்சுவிட்டான்.

'உண்மையைச் சொன்னால் என்ன? உன்ரை ரிக்ஷாவிலை ஏறி உன் னிலை நான் சவாரி செய்ய விரும்பவில்லை. நீயும் மனுசன்; நானும் மனு சன். அதுதான்... உனக்குச் சொன்னாலும் புரியாதுபோலை'' என்று சொல்லி, அவன் கையில் ஐம்பது சதக் குத்திக் காசொன்றை எடுத்து வைத்துவிட்டு நடக்கத் தொடங்கினேன்.

என் சமதர்மக் கோட்பாட்டினைக்கெட்டியாகக் காப்பாற்றிவிட்ட வெற்றி முறுவல்!

சற்றுத்தூரம், வீதிக்குக் குடைபிடித்து நிழல் பரப்பும் வாகை மரத்தை யும் தாண்டி, பிள்ளையார் கோவில் ஒழுங்கையையும் கடந்து நடந்திருப்பேன்.

ரிக்ஷா வேகமாக என்னைத் தாண்டி நின்றது. வெறு வயிற்றில் இழுத்த களைப்பு. மேலும் கீழும் வெட்டிக் கிளர்தெழும் மூச்சினை விட்டுச் சின் னட்டி நின்றன்.

'இதென்னடா, காலங்காத்தலை வம்பை விலைக்கு வாங்கியிருக்கிறேன்! இதுகளுக்கு எப்படிக் குடுத்தாலும் அண்டாது!' என்று என் பரம்பரையான மத்திய தர வர்க்க உணர்வு ஒரு கணம் தலைநீட்டி எட்டிப் பார்த்தது.

ஒரு இமைப் பொழுது நேரத்தில் கல்லாகிய மனதுடன், ''என்ன சும்மா போகவிட மாட்டியே?'' என்றேன்.

சின்னட்டியின் கண்கள் கலங்கின. பசி வேக்காட்டில் உலர்ந்திருந்த உதடுகளை நாக்கால் நக்கிக் கொண்டான்.

''தம்பி! குறை நினைக்காதையும். நான் ரிக்சோக்காரன்; உழைச்சுப் பிழைக்கிறவன். பிச்சைக்காரனில்லை!'' என்றுசொல்லி, நான் கொடுத்த நாயணத்தைத் திருப்பித் தந்துவிட்டு ரிக்ஷாவை நிமிர்த்தினான்.

ஒரே ஒரு கணம்....

- ''அவன் மனிதன்!''

'மனிதன், உழைக்கும் சக்தியையே நம்பி வாழுபவன்.'

''இந்தா...''



''என்ன, தம்பி?''

''ரிக்ஷாவைக் கொண்டா.''

நான் ரிக்ஷாவில் ஏறினேன்.

இந்தச் சம்பவங்களில் நீந்திய நான், அதற்குப் பின்னர் சின்னட்டியின் நிரந்தர வாடிக்கைக்காரர்களில் ஒருவனாகிவிட்டேன்! ஏறும்பொழு தெல்லாம் அவனும் நானும் கலகலப்பாகப் பேசிக் கொள்வோம்.

இன்று வழக்கதிற்கு விரோதமான மௌனம்...

ரிக்ஷா ஸ்டேசன் சந்தியால் திரும்பி, ஆஸ்பத்திரி வீதியில் ஓடிக் கொண்டிருக்கிறது...

''என்ன தம்பி, பேச்சுமூச்சைக் காணேன்? காணியிலை வழக்குச் சித்தாயங்களோ?''

''இல்லை சின்னட்டி; அவ்வளவு கரைச்சலில்லை

இண்டைக்கு எப்படியும் முடிந்திடும். அது சரி...உன்ரை பாடு எப்படி?''

''தெரிஞ்சதுதானே! தம்பியைப்போலை ரெண்டொருத்தர் வந்தா உண்டு இல்லாட்டிப்போனா, வெறும் ரிச்சோவை இழுத்துக் கொண்டு வீட்டை போக வேண்டியதுதான்.''

''அப்ப, வீட்டுப்பாடுகளை ஆர் கவனிக்கிறது?''

''ஏன் தம்பி, பொய் சொல்லவேணும்? என்ரை மூத்தவன் இப்ப டாக்ஸியிலே வேலை செய்யுறான். சோத்துக்குப் புழையில்லை. பாடு பட்ட உடம்பு; வீட்டிலை சும்மா குந்தி இருக்க முடியாதே? நான் இதை இழுக்கிறதும், என்ரை மோனுக்கும் புடிக்கிறதில்லை. என்னையும் கார் ஓட்டப் பழக்கி வீடுறானாம்.... பேய்ப் பொடியன்! இந்த வயசுக்குப் புறகு எப்படிக் காரோட்டுறது எண்ட விசயம் எனக்கென்னவோ விளங்கல்லை.''

பழக்கப்பட்ட கால்களும், அந்தக் கால்களின் உதை சக்தியால் ரிக்ஷா வும் அடைக்கல மாதாகோவிலைத் தாண்டி ஓடிக் கொண்டிருக் கின்றன......

# மக்கள் நலனுக்கான சட்டங்கள் மதநம்பிக்கைகளுக்கு முரணானவையா?

எமது பிரதேசம் நாம் வாழ்வதற்கு மட்டுமன்று எமது எதிர்காலச் சந்ததியினரும் இங்கு சுபீட்சமாக வாழ வழி கோலுவது எங்கள் பொறுப்பே. எனவே ஒவ்வோர் உள்ளூராட்சி சபைக்கும் உரிய பிரதேசங் களில் கட்டடங்கள் நிர்மாணிக்கும் போது அத்தியா வசியப் படுத்தப்படும் கட்டட விண்ணப்ப படிவங் களை அவ்வப் பிரதேசங்களில் பெற்று உரிய முறை யில் பூர்த்தி செய்து நிர்மாணிக்க வேண்டிய தலை யாய பொறுப்பு பொது மக்களாகிய நமக்கு உண்டு.

ஒரு தனிநபரால் தமது சொந்த காணியில் (ஆக னம்) கட்டடத்தை நிர்மாணிக்க முன்னர் சம்பந்தப் பட்ட பிரதேசத்தில் உள்ள பிரதேச சபைகளில் கட்டட விண்ணப்ப படிவத்தை பெற்று பூர்த்தியாக்கி அத னுடன் நில அளவை வரைப்படப் பிரதி, ஆதனத் தின் உறுதிப்பிரதி, கட்டட வரைபடம் போன்ற ஆவ ணங்களை இணைத்து சமர்பிப்பது மிகவும் அவசியம்.

அத்துடன் தங்கள் கடமை அனைத்தும் முடி வடைந்துள்ளது எண்ணலாகாது. தம்மால் சமர்ப் பிக்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என் பதை அறிய வேண்டும். பிரதேச சபையால் வழங்கப் படும் பத்திரம் கிடைத்த பின்னரே கட்ட நிர்மாண வேலை யிடினை ஆரம்பிக்க வேண்டும்.

நிர்மாண வேலை யாவும் அனுமதி வழங்கப் பட்ட வரைபடதிற்கு அமைவாகவே அமைய வேண் டும் என்ற அவசியத்தன்மையினை கருத்தில் கொள்ள வேண்டும். நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடத்துக்குரிய வரைபடங்கள் வரைதலுக்கு அவ்வப்பிரதேச சபை களில் பதிவு செய்தபடவரையுனர் ஊடாக வரையப் படல் வேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக் கது.

**வீதிகளுக்குத் தூரத்தே கட்டடம்**

எமது பிரதேசத்தின் ஊடாக செல்லும் வீதிகளின் விஸ்தீரண எல்லைக்கு அப்பால் கட்டடங்கள் அமைக் கக்கூடியவாறு வரைபடம் வரைதல் வேண்டும். குறிப் பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய (R.D.A) வீதி எனின் பொது வழிச்சட்டம் 32(1) மற்றும் 32(2) ஆவது சரத்துக்களின்படி Aதரம் எனின் வீதியின் மத்தியில் இருந்து 15 மீற்றருக்கும் Bதரம் எனின் 12 மீற்றருக்கும் அப்பால் அமையவேண்டும். அதே போல் வீதி அபிவிருத்தி திணைக்கத்தின் வீதிகளும் (R.D.A) பிரதேச சபைக்கு உரித்தான வீதிகளும் குறிப் பிடப்பட்ட வீதி எல்லை விஸ்தீரணத்திற்கு ஏற்புடை யதாக அமையப் பெறவேண்டும்.




இது போன்ற விண்ணப்பங்களை பூர்த்தி செய் யாது நிர்மாணிக்கப்படும் கட்டடம் 1987ஆம் அண் டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டப்பிரிவு 47(49) வீடமைப்பு நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம் பிரிவு 19ஐ மீறியுள்ளதாக கருதப்பட்டு தண் டனைக்குரிய குற்றம் புரிந்த நிலைக்கு ஆளாக நேரிடும்.

சிலர் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை யினை சாதகமாக பயன்[illegible] வகையில் கட்டடங்களை நிர்மாணிக்கின்றனர். சில உரிமையாளர்கள் அரச விடுமுறை தினங்களாக சனி, ஞாயிறு நாள்களையும், இரவு வேளைகளை யும் சாதகமாக பயன்படுத்தி அவசரமாக நிர்மா ணிக்கின்றமையும் அவதானிக்க முடிகிறது. அதேசமயம் இச்சட்டதிட்டங்கள் இலங்கை அரசுக்கு உரித்தானது என்றும் தமிழ் பேசும் சமூகம் ஒன்றுக்கென சமஷ்டி அல்லது சுயாட்சி பெற்றுக்கொள்ளும் போது இப்படி யான சட்டங்கள் செயல் இழந்து விடும் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. இது தவறான கருத்தாகும். இத்

பெ. செல்வானந்தம்
(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
புத்தூர்.

தகைய சட்டங்கள் உலகளாவிய ரீதியில் அந்தந்த நாடு களின் வள நிலைக்கு ஏற்ப ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தால் இப்போதுள்ள நிதி எமக்கென நிர்வாகம் கைக்கு வந்த பின்னரும் இவை தொடர்ந்து இவை இல்லா தொழிய வாய்ப்பில்லை செய்யும் இதனை மக்கள் தங் கள் மனங்களில் ஆழமாக பதித்துக் கொள்வது சாலச் சிறந்தது.

***மலசல கூடங்களை அமைக்கும்போது.....***

கட்டடங்களை அமைக்கும்போது எடுக்கப்ப வேண் டிய வழிமுறைகளைப் போலவே மலசல கூட குழிகள் அமைக்கும் போதும் குடாநாட்டின் நில நீர்வளநிலை பாதிப்புக்குள்ளாகாத வண்ணம் கவனம் செலுத்தப் பட வேண்டும். சனத் தொகை அதிகரிப்பு வீதத்தி னால் எதிர்காலத்தில் பாரிய போக்குவரத்து, சுகாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். [illegible] இச்சட்டங்கள் மிகவும் கடுமையாக கை யாளப்பட வேண்டியுள்ளது.

சுமார் மூன்று தசாப்தங்களிற்கு முன்னர் இப் போதுள்ள வாகன நெரிசலோ, விபத்துக்களோ ஏற் படக் கூடும் என்ற கருதுகோளினை ஏற்றுக்கொள்ள வில்லை. இன்றைய விபத்துக்களும், நோய்த் தொற் றுக்களுக்கும் இத்தவறே வழிவகுத்துள்ளது. தற் போது சகல மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை யாவும் மலசல கூட குழி அமைக்கும் போது நச்சுத் தடை குழி (Septictank) எனும் முறையினை கட்டாய மாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது எதிர்வரும் காலங்களில் ஏற்படக் கூடிய பாரிய சுகாதாரச் சீரழி வின் பாதுகாப்பு அரண் என்றே கருதமுடியும்.

**கட்டடங்களும் மத நம்பிக்கைகளும்**

கட்டடங்கள் நிரந்தரமாக நிலைக்க வேண்டி யவை. அவற்றை நிர்மாணிக்க முன்னர் இதுபோன்ற சட்டங்களினை பின்பற்ற வேண்டும் என்ற கருத் தினை தெரிவிக்கும் போது, மதநெறிகளுக்கு அல் லது மத் நம்பிக்கைகளுக்கு மாறுபட்ட வகையில் அமைக்கப்படுவதாக சிலர் வாதத்தினை முன்வைக் கின்றனர். ஆனால் உலக நாடுகளின் விஞ்ஞான ஆராய்ச்சிகளும், விஞ்ஞான ஆராய்சிகளின் மூலம் கண்ட வெற்றிகளுக்கு குறித்த மதவழிகாட்டல்களின் பங்கு அளப்பெரியது எனலாம். அது போன்று இங்கு நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்களும் விதிகளும், இம்மதநெறிக்கு அப்பாற்பட்டவை அல்லது முர ண்ானது முதலானவை என்பதனை முதன்மைப் படுத்தினால் அவை சட்ட மீறல்களாகவே முடியும் சோதிட ரீதியாக கவனிக்கும் போது வீட்டு வாசல் கள், யன்னல்கள் அமைக்கும் போது சூரிய ஒளி, வளி என்பன கிடைக்கும் வகையில் ஏற்ற திசையில் அமைக் கப்படுவதுடன், காந்த ஈர்ப்பு விசையினையும் கவனத் தில் கொள்வது வழமை. அவற்றினையே சட்டங்க ளும் வெளிப்படுத்துகின்றன.

சட்டம் இல்லாத சமூகம் குழப்பமானதாகவே அமையும் சட்டத்திற்கும் சமயத்திற்கும் ஆரம்ப காலம் தொட்டு நெருங்கிய தொடர்புகள் காணப் படுகின்றன. அதாவது சமயமென்றால் சட்டமாகவும் சட்டமென்றால் சமயமாகவும் இருந்துள்ளது. சட்டம் சமூகத்தை பாதுகாப்பதனால் ஒவ்வொரு வரும் சட் டத்திற்குக் கீழ்படிய வேண்டிய அவசியம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

கொக்குவில் கோணாவளை ஒழுங்கையில் மருத்துவபீட வளாகத்துக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**தியாகராஜா கிளினிக்**
**191, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.**

(62354)

## தவறிவிட்டது

காரைநகர், களபூமி, வழுப்போடை எனும் விலாசமுடைய கௌரி சோமசுந்தரம் (887571511V) என்பவரது தேசிய அடையாள அட்டையும் 'பேர்கம்' ஆனைக்கோட்டை மாதாகோயிலுக்கும் ஆனைக்கோட்டை சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி விலாசத்திற்கோ அல்லது 0777 250987 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொண்டு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (62349)

## நாய்க்குட்டி விற்பனைக்குண்டு

டோமன் இன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு

தொடர்பு:
0777554528

(62356)

## விற்பனைக்கு

PanaSonic டெக், பெரிய கரம் போட், பௌதீகவியல், இணைத்த கணித, சமையல் புத்தகம் அகராதிகள் (ஆங்கில தமிழ் மொழி புத்தகங்கள்), 'இந்திய தமிழ் ஆங்கில சஞ்சிகைகள் என்பன விற்பனைக்கு உண்டு தினசரி 2 மணிக்குப்பின்பு.

T.P.No.0776648751
R.பாலசுப்பிரமணியம்
பௌதிகவியல் ஆசிரியர்,
42/1, இந்துக்கல்லூரி
ஒழுங்கை, நீராவியடி,
(வசந்தா ரெக்ஸ்ரைல் அருகில்)
யாழ்ப்பாணம்.
(62361)


# மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்




சுவிஸை வசிப்பிடமாகக் கொண்ட அகிலன்-சர்மிளா தம்பதியினரின் செல்வப் புதல்வி

**அ.அபிரா**

தனது சுவிஸ் இல்லத்தில் இன்று (01.07.2007) ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை கொழும்பு தெஹிவளையில் வசிக்கும் அம்மப்பா க.மகாதேவ, அம்மம்மா ம.கிருபாஸ்கரி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மாமா, மாமி, மச்சாள்மாரான மகிசனா, சாளினி, சுவிஸில் வசிக்கும் பெரியப்பா, பெரியமாமி, கொழும்பில் வசிக்கும் சின்ன அம்மப்பா, அம்மம்மா, அத்தை சரனியா ஆகியோர் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

தகவல்: **அம்மப்பா** (மகாதேவ),
**அம்மம்மா** (ம.கிருபாஸ்கரி).

(62335)

# அறிவித்தல்

## சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## சுன்னாகம்

# கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல் 14-07-2007

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20.02இன் படி தன்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக இக்கிளைகளின் பொதுச் சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பந்தி 9 இற்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் காலஅட்டவணைப்படி நடைபெறும் என யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**01. கிளைப் பொதுச்சபைக் கூட்ட ஆரம்பம் 14-07-2007 முற்பகல் 10 மணி**
**02. கூட்டம் நடைபெறும் இடங்கள் - விபரம் கீழ்வருமாறு**

| தொ.இ | கி.இல | கி.பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 129 | நாக்கணாவத்தை | வாணி அறிவொளி ச.ச.நிலையம், அளவெட்டி. |
| 02. | 130 | அலுக்கை | பாரதி பொது மண்டபம், அலுக்கை. |
| 03. | 131 | பத்தானை | பாரதிதாசன் ச.ச.நிலையம், பத்தானை. |
| 04. | 132 | தஞ்சிட்டி | அறிவொளி ச.ச.நிலையம், தேரிட்டி, அளவெட்டி. |
| 05. | 133 | புன்னாலைக்கட்டுவன் | அறிவொளி ச.ச.நிலையம், சேச்சடி, புன்னாலைக்கட்டுவன். |
| 06. | 134 | கோட்டடி | புனித சவேரியார் முன்பள்ளி, குளமங்கால். |
| 07. | 135 | மயிலங்காடு | ஸ்ரீமுருகன் ச.ச.நிலையம், மயிலங்காடு. |
| 08. | 136 | மடத்துவாசல் | சிவலோகபதி ச.ச.நிலையம், கட்டுவன், மல்லாகம். |
| 09. | 138 | ஸ்ரேசனடி | தலைமைக் காரியாலயம், சுன்னாகம். ப.தெ.வ.கூ.சங்கம். |
| 10. | 139 | நவீனம் | தலைமைக் காரியாலயம், சுன்னாகம் ப.தெ.வ.கூ.சங்கம். |
| 11. | 140 | செல்லவளவு | தலைமைக் காரியாலயம், சு.ப.தெ.வ.கூ.சங்கம். |
| 12. | 142 | டச்சுறோட் | தமிழ்ஒளி ச.ச.நிலையம், உடுவில். |
| 13. | 143 | குப்பிளான் | தலைமைக் காரியாலயம், சுன்னாகம். ப.தெ.வ.அ.கூ.சங்கம். |
| 14. | 144 | கல்லாரை | வளர்மதி ச.ச.நிலையம், கல்லாரை. |
| 15. | 145 | ஈவினை | கலையரசி ச.ச.நிலையம், ஈவினை. |

**முக்கிய கவனத்திற்கு:**

01. கூட்டுறவுச் சட்டத்திற்கு அமைவாக தகுதி பெற்ற உறுப்பினர்களுக்கு மட்டும் கூட்ட அறிவித்தல்கள் தவிசாளராக கடமையாற்ற என்னால் பெயர் குறித்துரைக்கப்படும் அலுவலரினால் அனுப்பப்படும்.
02. உறுப்பினராக சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டுக் காலத்தை கடந்தவரும் ஒரு பங்கின் முழுப்பெறுமதியான ரூ.100/- ஐ செலுத்தி முடித்தவருமான உறுப்பினர் ஒருவரே மேற்குறித்த தகுதிபெற்ற உறுப்பினராவார்.
03. கிளைப்பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்கத் தகைமையுள்ள உறுப்பினர்களின் 1/4 பங்கினர் அல்லது 25 பேர் இதில் எது குறைவோ அவ்வெண்ணிக்கை ஆகும்.
04. கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமூகம் அளித்துள்ள உறுப்பினர் மத்தியில் இருந்து எட்டுப்பேரும் மகளிர் குழுவில் இருந்து ஒருவருமாக (01) மொத்தம் 9 (ஒன்பது) உறுப்பினர்கள் கிளைக்குழுவிற்குத் தெரிவு செய்யப்படுவர் இவர்களில் குறைந்தது இருவராவது 18-35 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
05. கிளைப் பொதுச்சபை கூட்டத்திற்கான நிறைவெண் இல்லாதவிடத்தும் கிளைக்குழுத் தெரிவிற்காக ஐந்திற்கும் (5) இற்கும் குறைவாக நியமனங்கள் செய்யப்பட்டவிடத்தும் கிளைக்குழு உறுப்பினர் தெரிவு நடைபெறாது கூட்டம் கலையும்.
06. கீழ்க் குறிப்பிடப்படுவோர் கிளைக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படும் தகைமையற்றவராவர்.
    - 6.1 கிளையின் தகைமை பெற்ற உறுப்பினர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்.
    - 6.2 பதினெட்டு (18) வயதிற்குக் குறைந்தவர்.
    - 6.3 உடன் முன்சென்ற மூன்று ஆண்டுகளுக்குள் ஒழுக்கச் சீர்கேடு சம்மந்தமான குற்றச்சாட்டில் குற்றவாளி ஆக்கப்பட்டவர், அல்லது மூன்று அதற்கு மேற்பட்ட மாத காலத்திற்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்.
    - 6.4 சித்த சுவாதீனம் அற்றவர்.
    - 6.5 கடன் இறுக்க நிர்வாகமின்மை கோரி விண்ணப்பம் செய்தவர் அல்லது அவ்வாறு தீர்ப்புப் பெற்றவர்.
    - 6.6 இச் சங்கத்திடம் அல்லது வேறு ஏதேனும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்திடம் பெற்ற ஏதேனும் கடனை தீர்ப்பதில் அல்லது வேறு எந்த விதத்திலேனும் தவறியவர்.
    - 6.7 சங்கத்தின் நலத்திற்கெதிரிடையான தொழிலினை நடத்துபவர்.
    - 6.8 இச்சங்கத்தின் அல்லது இச்சங்கம் உறுப்புரிமை வகிக்கும் ஏதேனும் சங்கத்தில் சம்பளம் பெறும் பணியாளர்.
    - 6.9 உறுப்பினர் என்ற முறையில் அன்றி நேர்முகமாகவோ மறைமுகமாகவோ சங்கத்திடம் அல்லது சங்கம் செய்துள்ள ஒப்பந்தத்தில் அல்லது ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களில் அக்கறையுடையவராயிருப்பவர்.
    - 6.10 கடந்த ஐந்த ஆண்டுகளுக்குள் கூட்டுறவுச் சங்க விதிகளின் கீழ் தமது பதவியை அல்லது வேலையை விட்டகலவேண்டி நேரிட்டவர்
    - 6.11 கிளைப் பொதுச்சபைக் கூட்ட திகதிக்கு முன்னர் சங்க உறுப்புரிமையை இழந்தவர்.
    - 6.12 பாராளுமன்ற, மாகாணசபை, நகரசபை அல்லது பிரதேச சபையில் உறுப்பினராக உள்ளவர்.
    - 6.13 சங்கத்தின் உற்பத்தி நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக 6 மாதங்களுக்கு மேல் ஈடுபாடில்லாதிருப்பதை சம்மந்தப்பட்ட கிளைக்குழுவால் உறுதிப்படுத்தப்பட்டவர்.

**30-06-2007**
**மின்சார நிலைய வீதி,**
**சுன்னாகம்.**

**செ.தவராசா**
[illegible],
சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது).

(சி/52799)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருகுல வகுப்புகள்

*சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய குருகுல கலாசாலையில் 11.06.2007 ஆம் திகதி தொடக்கம் தினசரி சமஸ்கிருத ஆகம வகுப்புக்கள் பிரம்மஸ்ரீ ப.ராஜகோபாலசர்மா அவர்களால் நடாத்தப்பட்டு வருகின்றன.வைதீக வகுப்புக்கள்யாவும் இன்று (01.07.2007) ஞாயிறு தொடக்கம் பிரம்மஸ்ரீ .தா.மகாதேவ சிவாச்சாரியார் அவர்களால் தொடர்ந்து நடாத்தப்பட இருக்கின்றன. ஒருவருட கால பயிற்சியை தொடர்ந்து பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு உயர் கல்வி பெறும் வாய்ப்புக்களும் சிவாச்சாரிய அபிஷேகமும் இலவசமாக எமது அமைப்பினூடாக செய்து வைக்கப்படும். மாதாந்த கருத்தரங்குகள் தொடர்ந்து இடம்பெற இருக்கின்றன.*

*வடமராட்சியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கலந்துரையாடல் 03.07.2007 செவ்வாய் பிற்பகல் 2 மணிக்கு மாலிசந்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெறும். ஏனைய வகுப்புக்கள் யாவும் வழமை போல் நடைபெறும்.*

**யோ.பிரபாகரக்குருக்கள்.**
*செயலாளர்.*

*(62351)*

விஷ்ணு பாட்ஸ் ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை, யாழ்.உரிமையாளர்
திருமதி நடராஜா நாகரத்தினம் அவர்களின்

# ஓராண்டு நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தாயின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 02 | 17 |
| 04 | 07 |
| 1942 | 2006 |

## திருமதி
# நாகரத்தினம் நடராசா (மணி)

(புலோலி கிழக்கு - பருத்தித்துறை கிராமக்கோட்டடியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையில், 23, இராஜசிங்க ரோட்டை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தவர்)

*பாசத்தின் இருப்பிடமே*
*பண்பின் சிகரமே*
*எம் குடும்ப விளக்கே*
*ஆண்டு ஒன்று சென்றாலும்*
*ஆறுமா எம் நெஞ்சம்*
*உங்கள் பிரிவு எதற்கும்*
*ஈடாகுமோ தாயே!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்யும்

**கணவர், மகன்மார்கள், மகள்மார்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்.**

தகவல்:
*நடராஜா -கணவர்,*
T.P.: 2554162

(சி/52790)

# மரண அறிவித்தல்

## *திருமதி* வேலாயுதபிள்ளை தியாகேஸ்வரி *(தங்கச்சியம்மா)*



மீசாலை, ஐயாகடையடியைப் பிறப்பிடமாகவும், சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதபிள்ளை தியாகேஸ்வரி (27.06.2007) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - தங்கமுத்து தம்பதியரின் இளையமகளும், தியாகராஜா - தையல்நாயகம் தம்பதியரின் மருமகளும் வேலாயுதபிள்ளையின் (சாயிராம் மருந்தகம்) அன்பு மனைவியும் கோபிநாத் (மருத்துவபீட மாணவன் ரஷ்யா நட்புறவு பல்கலைக்கழகம்), பிறேம்நாத் (அமெரிக்கா), பிரவீணா (வேம்படி மகளிர் கல்லூரி 2007 A/L மாணவி), சேயோன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவப்பிரகாசம், வேலாயுதபிள்ளை, மகாதேவா, யோகேஸ்வரி, கோடீஸ்வரன், லேகேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், புனிதவதி, பத்மாவதி (அமரர்), திருஞானவதி, செல்வநாயகி, சிவகுமாரன் (மக்கள் வங்கி - தலைமையகம் யாழ்.), கமலாவதி (அமரர்), மங்களம்மா (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஐயாகடையடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொற்புலவு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐயா கடையடி,*
*மீசாலை.*

தகவல்:
**தி.வேலாயுதபிள்ளை**
சாயிராம் மருந்தகம், சங்கத்தானை.

(52800)

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நிழலோடு யுத்தம் வேண்டாம் நிஜத்தோடு போர் புரியுங்கள்!

ஈழத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை ஒட்டி இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்போது தெரிவித்து வரும் கருத்துக்களைக் கேட்டு அழுவதா, சிரிப்பதா என்று தெரியாமல் வேதனைப் படுகின்றார்கள் நம் தமிழ் மக்கள்.

உதாரணத்துக்கு தலைநகர் கொழும்பில் தங்குமிட விடுதிகளில் இருந்து தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட கொடூரத்தை எடுத்துக் கொள்வோம். தமது சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவினால் எடுக்கப்பட்ட மூடத்தனமான இந்த நடவடிக்கை மஹிந்த ராஜபக்ஷ அரசை 'பூமராங்' ஆக வந்து திருப்பித் தாக்கி நிற்பதால் தடுமாறுகிறார் அவர். உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் பெரும் எதிர்ப்பு அலைகளை இந்த முட்டாள்தனமான செயற்பாடுகள் எழுப்பியுள்ள பின்னணியில், தமது சகோதரரின் செயற்பாட்டைக் குறை கூறவும் முடியாமல், அதை நியாயப்படுத்தவும் இயலாமல், இரண்டுங்கெட்டான் நிலையில் அந்தக் கொடூரத்தைச் சமாளிக்க எத்தனிக்கிறார் அவர்.

*''மூன்று லட்சம் தமிழர்கள் தலைநகரில் இருக்கின்றார்கள். அவர்களில் முந்நூறு பேரை மட்டுமே வெளியேற்றினோம். சுமார் பதினைந்தாயிரம் தமிழ் இளைஞர்கள் தலைநகரில் வசிக்கின்றார்கள். அவர்களில் ஆக எழுபத்தியைந்து பேரை மட்டுமே அகற்றினோம். இதற்காக இவ்வளவு கூச்சலா?''* - என்ற சாரப்பட பொது வைபவங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நியாயம் பிளக்க ஆரம்பித்திருக்கின்றார். இந்த வியாக்கியானத்தைக் கேட்டு வாயடைத்து நிற்கின்றார்கள் தமிழர்கள்.

ஜனாதிபதி அவர்களே! நீங்கள் கூறும் சமாளிப்பில் இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அவற்றைத் தங்களுக்கு விளக்குவது தமிழர் தரப்பின் பொறுப்பாக இருக்கிறது.

ஆம். உண்மையில் முதல் கட்டமாக முந்நூறுக்கும் நானூறுக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையான தமிழர்களை அகற்றுவதுடன் தான் உங்களின் பலவந்த வெளியேற்ற நடவடிக்கை ஆரம்பித்தது. ஆனால் உங்கள் திட்டம் அது மட்டுமல்ல. அத்துடன் முடிவதல்ல அது. ஆக ஆரம்பம் மாத்திரமே. உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் கடும் எதிர்ப்பு அலை எழுந்திராவிட்டால் - இந்தக் கொடூரத்தைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்க முடியாது என இலங்கை நீதித்துறை கொதித்து எழுந்திராவிட்டால் - இந்த முந்நூறு என்ற எண்ணிக்கை மூன்று லட்சத்தை எட்டும்வரை இத்தொடர் நடவடிக்கை நிறுத்தப்பட்டிருக்க மாட்டாது என்பதும் பரகசியம்தான்.

அடுத்து - மூன்று லட்சம் பேர் இருக்க ஆக 300 பேரைத் தானே வெளியேற்றினோம் என்ற தங்களின் பசப்பு வார்த்தை தாங்கள் குறித்து மக்களை எள்ளி நகையாட வைத்திருக்கின்றது.

*''நாட்டில் இரண்டு கோடி மக்கள் உயிர் வாழ, நான் ஆக இரண்டு பேரைத்தானே கொலை செய்தேன். அதற்காக என்னைக் கொலைகாரன் என்று கூறித் தண்டிக்க முயல்வதா?''* - என ஒரு கொலை வெறியன் தன் செயலை நியாயப்படுத்துவதற்கும் நீங்கள் உங்கள் சகோதரரின் மேற்படி கொடூர நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்கும் இடையில் ஏதேனும் பெரிய வேறுபாடு இருப்பதாகத் தமிழர்களுக்குத் தோன்றவில்லை.

ஜனாதிபதி அவர்களே!

உங்கள் ஆட்சி நிர்வாகத்தில் இருக்கும் கொழும்பில் ஏனைய அனைத்துப் பிரஜைகள் போல வாழும் தமிழர்களே அந்த சுமார் எழுபத்தியைந்து இளைஞர்கள் உள்ளிட்ட முந்நூறுக்கும் அதிகமான தமிழர்கள். அவர்களுக்கும் நீங்கள்தான் பதில்கூற வேண்டிய ஜனாதிபதி என்பதை மறக்காமல் உங்கள் விளக்கத்தை நீங்கள் வெளிப்படுத்துவதே பொருத்தமானதும் நியாயமானதும் ஆகும்.

தலைநகரில் வசிக்கும் ஏனைய பல லட்சம் மக்களின் பாதுகாப்புக் கருதி இவர்களை வெளியேற்ற வேண்டிய தேவை எழுந்தது என உங்களின் பொலிஸ் மா அதிபர் வேறு விளக்கமளித்திருக்கின்றார்கள்.

உங்கள் பொலிஸ் மா அதிபரின் கூற்றுப்படி இந்தப் பாதுகாப்பு அச்சுறுத்தலினால் பாதிக்கப்படப் போகின்ற மக்களின் எண்ணிக்கை என்ன? அச்சுறுத்தல் பல லட்சம் மக்களுக்கு என்றாலும் அந்த அச்சுறுத்தலினால் உயிர் பலியாகப் போகின்றவர்கள் எண்ணிக்கை ஒரு சில நூறுகளைத் தாண்டுமா? அப்படி ஒரு சில நூறு பேரின் உயிராபத்துக்காகப் பல்லாயிரக் கணக்கானோரை வல்வந்தமாகத் துரத்துவது நியாயமா? உங்கள் அத்துமீறலை எண்ணிக்கை அடிப்படையில் நீங்கள் நியாயப்படுத்த முயல்வதால்தான் இவ்வாறு விதண்டாவாதக் கணக்குப் பேச வேண்டியிருக்கின்றது.

ஒருவர் என்றாலும், இருவர் என்றாலும் நூறுபேர் என்றாலும், பல்லாயிரம் மக்கள் என்றாலும் ஒவ்வொரு மனித ஜீவனும் உயிரே ஒவ்வொரு மனிதனும் அவனுக்கு - அவனது குடும்பத்துக்கு - அவனது பிரதேசத்துக்கு - அவனது இனத்துக்கு - மாண்பு மிக்க மனித ஜீவனே. இதில் எண்ணிக்கை இரண்டாம் பட்சமே. எண்ணம் தான் முக்கியமானது.

உங்கள் எண்ணம் நியாயம் தப்பியது. அதனால் எண்ணிக்கையைக் காட்டி சமாளிக்கும் பொருத்தமற்ற பண்பு நிலைக்கு நீங்கள் தள்ளப்பட்டிருக்கின்றீர்கள்.

தங்கள் இனத்தின் வாழ்வுரிமைக்காகப் போராடும் புலிகளின் பக்கம் சில நியாயங்கள் இருக்கின்றன. அந்த நியாயங்களை எதிர்கொள்ள முடியாத நீங்களும், உங்கள் அரசும் புலிகள் யாருக்காகப் போராடுகின்றார்களோ அந்த இனத்துக்கு எதிராகப் பழி தீர்த்துக்கொள்ள முயல்கின்றீர்கள்.

அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் நிர்க்கதியற்ற நிழல்கள். அவர்களோடு மோதுவதில் - பழி தீர்ப்பதில் - பலி கொள்வதில் - அர்த்தமில்லை. அது அபத்தமானது. நிழலோடு யுத்தம் புரிவதை விடுத்து நிஜத்தோடு - போர் புரிவதே நியாயம். நிழலான அப்பாவிப் பொதுமக்களை விட்டு விடுங்கள்!

# திருத்தப்பட்ட தீர்வு யோசனையை சு.கட்சி ஜூலை 22இல் வெளியிடும்

கொழும்பு, ஜூலை 1

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திருத்தப்பட்ட அரசியல் தீர்வு யோசனை ஜூலை மாதம் 22ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. ஜூலை 22 ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 17ஆவது தேசிய சம்மேளனக் கூட்டத்திலேயே இத்தீர்வு யோசனை வெளியிடப்படவுள்ளது என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் கூறியதாவது:-

அக்கட்சியில் இணைந்து மங்கள, சிறிபதி போன்றவர்களும் அதே சதி முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிழக்கில் தொப்பிகலப் பகுதியை படையினர் இன்னும் சில தினங்களில் கைப்பற்றி விடுவர். அப்போது கிழக்கு அரசின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் வந்து விடும்.

அதனைத் தொடர்ந்து வடக்கையும் படையினர் கைப்பற்றி விடுவர். அவ்வாறு நடந்துவிடக்கூடாது என்றே ஐக்கிய தேசியக்கட்சி விரும்புகின்றது.

அரசின் இந்த நடவடிக்கை தொடர்பாக மக்கள் மத்தியில் தப்பான கருத்துகளைப் பரப்ப ஐக்கிய தேசியக்கட்சி முற்பட்டு வருகின்றது. அது ஒருபோதும் நடக்காது. ஐ.தே.கட்சி இந்த அரசை எப்படித் தான் விமர்சித்தாலும் எமது பயங்கர வாத ஒழிப்பு நடவடிக்கை தொடரும். அதேவேளை சமாதானத்திற்கான ஏற்பாடும் முன்னெடுக்கப்படும்.

ஜூலை மாதம் 22 ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் திருத்தப்பட்ட அரசியல் தீர்வு யோசனை கட்சியின் 17 ஆவது தேசிய சம்மேளனக் கூட்டத்தின் போது வெளியிடப்படும் - என்றார் (சி)

## நயினாதீவில் நெடுந்தீவுப் பாய் இல்லை; திருவிழாவுக்கு வந்தவர்களின் நித்திரை பாதிப்பு

நயினாதீவு,ஜூலை 1

இம்முறை நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவத்தை முன்னிட்டு குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலும் இருந்து வந்த மக்கள், இரவு வேளையில் மரங்களின் கீழும் மண்டபங்களிலும் உறக்கமின்றித் தங்கியிருந்ததைக் காணமுடிந்தது. அவர்களது நித்திரை பாதிக்கப்பட்டிருந்தது.

நெடுந்தீவில் இருந்து இம்முறை உற்சவகால விற்பனைக்கென வழமை போன்று பனை ஓலைப் பாய்கள் வந்து சேராததே பக்தர்களின் உறக்கமின்மைக்குக் காரணம் என்று பலரும் கூறினர்.

நயினை அம்பாள் ஆலய உற்சவ காலங்களில் நெடுந்தீவில் இருந்து பெரும் எண்ணிக்கையான பாய்கள் விற்பனைக்காக எடுத்து வரப்படுவது வழமை. ஆனால், நெடுந்தீவில் இப்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக பாய் உற்பத்தி வீழ்ச்சியடைந்ததுடன் விற்பனைக்காக வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வதும் நின்று போயிற்று.

நயினாதீவுக்கு வரும் பக்தர்கள் தமது படுக்கைக்கென நெடுந்தீவுப் பாய்களை நம்பி வருவது வழமை. இம்முறை நெடுந்தீவில் இருந்து பாய்கள் வராமையால் இரவில் தங்கி நின்ற மக்கள் வெறும் தரைகளில் உரிய நித்திரையின்றிப் பாதிக்கப்பட்டனர். (அ-111)

## தரம் 3 அதிபர் பதவி: நேர்முகப்பரீட்சை கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூலை 1

இலங்கை அதிபர் சேவை தரம் - 3 பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் உரியவர்களின் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இருந்து தரம்-3 அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குரிய நேர்முகப்பரீட்சைகள் வலய ரீதியாக எதிர்வரும் 6ஆம் திகதியில் இருந்து யாழ்ப்பாண மாவட்ட மேலதிக கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளன. (அ-1-68)

## சிதம்பரா அதிபருக்கு நாளை சேவை நலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 1

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் நீண்ட காலம் அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெறும் அ.விஜயநாதனின் சேவைநலன் பாராட்டு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷும் கௌரவ விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பி.ரகுநாதன், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி க.மயிலேறும் பெருமாள் ஆகியோர் கலந்துகொள்வர். (அ-1)

## கோயிலில் இருந்து திரும்பியவேளை குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஜூலை 1

கோயிலில் இருந்து வீடு திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் ஆயுத தாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். நெல்லியடி - முடக்காடு - அரசடியில் இச் சம்பவம் நடைபெற்றது.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுத தாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வரணியைச் சேர்ந்த வல்லிபுரம் சற்குணராசா (வயது 57) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் தமது மனைவியுடன் தச்சன்தோப்பு ஆலயத் திருவிழாவில் கலந்துகொண்டு விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த போது, ஆயுத தாரிகள் அவரை வழிமறித்து மனைவியை இறக்கிவிட்டு அவரது கணவனை சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சடலம் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (அ-1)

## நாளை

| | |
|---|---|
| ஆனி - 18 | திங்கட்கிழமை 02.07.2007 |
| திதி : துதியை | முன்னிரவு 07.29 |
| நட்சத்திரம் : | முன்னிரவு 07.14 |
| சுபநேரம் | : 11.56 - 01.26 |
| ராகுகாலம் | : 07.26 - 08.56 |

## சமய சந்நிதியில்

நல்லூர்,ஜூலை 1

நெடுந்தீவு 5ஆம் வட்டாரம் தெற்கு காட்டு அம்மன் கோயில் பொங்கல் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும்.

கடந்த காலங்களில் மேற்படி ஆலய பொங்கல் விழா இரவு வேளைகளிலேயே நடைபெற்று வருவது வழக்கம். எனினும் இப்போது நெடுந்தீவில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இவ்விழா பகலில் இடம்பெறுகின்றது. (203-111)

* * *

இளவாலை ஒல்லுடை ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ளது. இந்த உற்சவம் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன. (1-135)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 1

நிக்கொட் நிறுவனத்தின் சேவைக்காலப் பயிற்சியில் பங்குபற்றிய தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை ஆசிரியருக்கான கலந்துரையாடல் இன்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை 1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 1, 2 ஆகிய வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்டச் செயலமர்வு இன்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை 1

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 21ஆவது ஆண்டு நிறைவுப் பொதுக்கூட்டம் இன்று காலை 9 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இடம்பெறும். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை 1

பருத்தித்துறை சதாவதானி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற சமூக சேவை உத்தியோகத்தர் மு.தர்மலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 1

சுன்னாகம், மயிலணி ஜனசக்தி முன்பள்ளியும் சிறுவர் கழகமும் நடத்தும் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மயிலணி முருகமூர்த்தி ஆலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சி.மகேந்திரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலிகாமம் வலய முன்பள்ளி [illegible] கல்விப் பணிப்பாளர் எஸ். குக[illegible] பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203)

## நடமாடும் நிபுணத்துவ மருத்துவ முகாம் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை 1

நடமாடும் நிபுணத்துவ சேவை மருத்துவ முகாம் இன்று காலை 9 மணி முதல் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெறும்.

நிபுணத்துவ வைத்தியர் குழுவால் பொது வைத்தியம், கண் மருத்துவம், சரும நோய், மகப்பேற்று மருத்துவம், சத்திர சிகிச்சை, குழந்தை நலம், புற்று நோய், மார்பு நோய் ஆகியவற்றுக்கான நிபுணத்துவ சேவை வழங்கப்படும்.

ஈ.சி.ஜி., அல்ரா சவுண் ஆகிய ஆய்வு கூடப் பரிசோதனைகளும் மருத்துவ முகாமில் இடம்பெறும். (அ-1)

## பொலிகண்டியில் சிப்பாய் சுட்டுத் தற்கொலை

யாழ்ப்பாணம்,ஜூலை 1

வடமராட்சி, பொலிகண்டியில் பணியாற்றிய சிப்பாயின் சடலம் ஒன்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் இரவு ஒப்படைக்கப்பட்டது.

கொடித்துவக்கு பன்னசிறி (வயது 46) என்ற சிப்பாயின் சடலமே ஒப்படைக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிவான் இச்சம்பவம் குறித்து நேற்று விசாரணை நடத்தினார்.

பிரஸ்தாப சிப்பாய் விடுமுறை கோரியதாகவும் அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அவர் தன்னைத் தானே சுட்டு மரணமானார் என்றும் விசாரணையில் படைத் தரப்பினர் தெரிவித்தனர்.

சடலத்தை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## கோயில் வீதியில் கொலையுண்டோர் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஜூலை 1

நல்லூர், கோயில் வீதியில் கைலாச பிள்ளையார் கோயில் சந்திக்கு சமீபமாக வெள்ளிக்கிழமை மீட்கப்பட்ட இருவரின் சடலங்களும் உறவினர்களால் நேற்று அடையாளம் காணப்பட்டன.

யாழ்ப்பாணம் மடத்தடியில் உள்ள பெற்றோல் நிலையத்தின் முகாமையாளரான சுப்பிரமணியம் அம்பிகைபாகன் (வயது 39) மற்றும் அந்த நிலையத்தில் பணிபுரியும் சிங்காரவேலு யோகேந்திரா (வயது 29) ஆகியோரின் சடலங்களே அவை என்று அடையாளம் காணப்பட்டது. இருவரும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர்கள்.

யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்று விசாரணைகளை நடத்திய பின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதிகளை உடன் கண்டுபிடிப்போர் ஆட்கடத்தல்காரர்களை பிடிக்கத் தவறுவதேன்?

## பொலிஸாரை வைகிறார் மனோ எம்.பி.

கொழும்பு, ஜூலை 1

''கொழும்பில் கிளைமோர்மற்றும் ஏனைய குண்டுவெடிப்புகள் உட்பட பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை உடனுக்குடன் கண்டுபிடித்துவிடும் பொலிஸாருக்கு நூற்றுக்கணக்கான நபர்களை கடத்தியுள்ள ஆட்கடத்தல்காரர்களையும், கோடிக்கணக்கான ரூபாய்களை கப்பமாகப் பெற்றுக்கொண்டுள்ள கப்பக்காரர்களையும் கண்டுபிடிக்க முடியாமல் போவது ஏன்?

''இந்தக் கேள்வியை தங்களது பிள்ளைகளை இழந்து தவிக்கும் பெற்றோர்களும், கணவன்மார்களை இழந்துதவிக்கும் சகோதரிகளும், தந்தையர்களை இழந்து தவிக்கும் பிள்ளைகளும் அரசைப் பார்த்துக்கேட்கின்றார்கள். இந்தக் கேள்விக்கு அரசின் பாதுகாப்பு விவகாரப் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல பதில் கூறவேண்டும்.''

- இவ்வாறு மேலக மக்கள் முன்னணித்தலைவரும், மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளருமான மனோ கணேசன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

அமைச்சர் ரம்புக்வெல ப்த்திரிகையாளர் சந்திப்பின்போது தெரிவித்த சில கருத்துக்கள் தொடர்பில் மனோ எம்.பி மேலும் கூறியதாவது:-

கொழும்பில் பல்வேறு இடங்களில் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்படுகின்றன. இவற்றில் தொடர்புடையோர் உடனுக்குடன் கைது செய்யப்படுகிறார்கள். இந்நடவடிக்கைகளை பொலிஸார் திறம்படச் செய்வதாகத் தெரிகின்றது. ஆனால், கடந்த 12 மாதங்களுக்கிடையில் கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களில் மாத்திரம் நூறு பேர் வரையில் காணாமல் போயுள்ளார்கள். கணிசமான தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் கடத்தப்பட்டு, கப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்கள். இதுதவிர பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இன்னும் சுமார் 25க்கும் மேற்பட்ட அடையாளம் காணப்படாத சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளையில், கொழும்பு நகருக்குள்ளே வீதிக்கு, வீதி சோதனை சாவடிகள் இருந்தும் இதுவரையில் எந்தவொரு சாவடியிலும் ஆட்கடத்தலில் ஈடுபடும் வெள்ளைவான்கள் நிறுத்தப்பட்டு, கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டு, கடத்தப்பட்ட அப்பாவிகள் விடுவிக்கப்பட்ட ஒரு சம்பவம் கூட இது வரை நடைபெறவில்லை.

காணாமல்போனோர் தொடர்பில் அவர்களது குடும்பத்தவர்கள் பொலிஸ் நிலையங்களிலே செய்துள்ள முறைப்பாடுகளை இலக்கம் வாரியாக நாம் தொகுத்துள்ளோம். இவை நூற்றுக்கும் மேற்பட்டுள்ளன. இவை தொடர்பில் பொலிஸார் எடுத்துள்ள நட வடிக்கைகள் என்ன? இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கெஹெலிய ரம்புக்வெல்ல அரசின் பதில்களைக் கூறுவதற்குக் கடமைப்பட்டுள்ளார்.

இவற்றின் பின்னணி என்ன என்பது பற்றி நாம் ஆராய்ந்து வருகின்றோம். மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சிற்சில கீழ்மட்ட நபர்களையும், வழமையான பாதாள உலக நபர்களையும் கைது செய்துவிட்டு கடத்தல்களையும், கப்பம் கோருதல்களையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துவிட்டோம் என அரசு உண்மைக்குப்புறம்பாக கூறக்கூடாது - என்றும் அவர் கூறினார். (க)

## கொக்குவில் நேற்று மாலை புத்தூர் இளைஞன் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 1

கொக்குவில் தலையாழிப் பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இளைஞர் ஒருவர் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

புத்தூரைச் சேர்ந்த இராசரத்தினம் சதீஸ் (வயது 26) என்பரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார் என அவரது அடையாள அட்டையில்இருந்துஇனங்காணப்பட்டுள்ளது.

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இவரை மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாதவர்கள் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என விசாரணையில் தெரிவிக்கப் பட்டது.

யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலத்தைப் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

BRIGHTMAN
நிறுவன அதி. நிர்வாகம், யாழ்.நகர்
A/L 2008 பொருளியல் பகுதி II
பணமும் வங்கியும்
By: P.சண்
ஆரம்பம்: 02.07.07 திங்கள் பி.ப.4.30
* தனிப்பாட அனுமதியுண்டு

**விற்பனைக்கு**
கே.கே.எஸ்.வீதியில் கோயில் வாசல், இணுவில் சந்தியில் சகல வசதிகளுடன் கூடிய வீடும், காணியும் (2 1/2 பரப்பு) அத்துடன் கட்டுவனில் 5 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 8155, 077 6636619

**விற்பனைக்கு**
கலப்பின ஆண் நாய் விற்பனைக்குண்டு.
396, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோயிலடி, உதயன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(சனி, ஞாயிறு பி.ப. 3-6 மட்டும் பார்வையிடலாம்.)

**காணி விற்பனைக்கு**
மானிப்பாய் பிரதான வீதியில் ஜின்னாவீதி, யாழ்ப்பாணம் (ஐந்து சந்திக்கு அருகில்) என்ற முகவரியில் சுற்று மதிலுடன் கூடிய ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6365926
அம்பகர் வீதி, கொக்குவில் கிழக்கு

**தேவை**
* காசாளர் (cashier)
* சந்தைப்படுத்தல் முகாமையாளர் (Marketing Manager)
* கணக்காளர் (Accountant)
* அலுவலக உதவியாளர் (Office Assistant)

**மூர்த்தி**
ஸ்ருடியோ & லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

**படிவம்**
தேசிய கல்விக் கல்லூரி அநுமதிக்கான விண்ணப்பப் படிவம் உண்டு.
முடிவுத்திகதி 20.07.2007
Bharathy Pathippakam, 430, K. K. S. Road, Jaffna.

பிரபலமான இரண்டு கல்வி நிறுவனங்களுக்கு ஆசிரியர்கள் தேவை
தரம் : 9, 10, 11 விஞ்ஞானம்
தரம்: 6, 7, 8, 9 சுகாதாரம், உடற்கல்வி
பயிற்றப்பட்டவர்கள், பட்டதாரிகள்
மாநகர சபைச் சூழலில் வசிப்பவர்கள்
தொடர்பு: 077 3126807

**விற்பனைக்கு**
கட்டுமானத்திற்குத் தேவையான சல்லிகள், அரிகற்கள் விற்பனைக்குண்டு.
வினஸ் கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையம்
65/1, அரசடி வீதி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை அருகில்), யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**
பலசரக்கு கடைக்குத் தேவையான (ட பட்ட), றாக்கை 4, அலுமினிய கண்ணாடி சோக்கேஸ் (6x3), தொலைபேசிக் கூடு (அலுமினியம்), மின்தராசு என்பன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு:
சுலக்ஷனா மினி மாக்கற்,
360/8, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 9112, 0779385266, 0775150621
(62348)

**K.C. திருமண சேவை**
இந்து கௌரவ குடும்பம் வயது 29, பட்டதாரி, செ.4, உயரம் 5' 4'' மணமகளுக்கு டாக்டர், எஞ்சினியர், கணக்காளர், B.Sc. ஆசிரியர் மணமகனும் பொறியியலாளர் உள்நாடு செ.6, மணமகனுக்கு பட்டதாரி B.Sc., B.Com. மணமகள் தேவை. உள்நாடு, வெளிநாடு மணமக்கள் உண்டு.
49/1, பூநாறி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்
(சந்திரன் கடை முன்பாக).
T.P.: 4591223
(62365)

**அதிரடி விலைக் கழிவில் மேசைத் தொலைபேசிகள்!**

* உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்
* நாளாந்த வாடகை ரூ 6/= மட்டுமே!
* சகல விதமான கையடக்கத் தொலைபேசிகளைக் குறைந்த விலையில் பெற்றிடவும், பழுது பார்த்திடவும் நாடவேண்டிய இடம்.
* டயலொக் பில் கொடுப்பனவுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.
நியூ பவர் செலூலர் ட்ரேடிங் கம்பனி
205/01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் அருகில்)
தொ.பே: 077 3518330, 0776660289

**துரித தபால்கள், பொதிகள் சேவை**
உள்நாட்டு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள்
உணவுப் பொருள்கள், அன்பளிப்பு பொருள்கள்,
உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள்,
CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
திருமுருகன் கொம் எநற்
259, க.கே.எஸ். வீதி, யாழ்பாணம். தொலைபேசி - 021 222 7835 (அ... முன்னால்)
16, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொலைபேசி - 021 222 7310 (நல்லூர்ப நோ.கூ. சங்கம் முன்னால்)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் துரைராசா

**(ஓய்வுபெற்ற பரிசோதகர்- யாழ். போதனா வைத்தியசாலை)**



கோகுல வீதி, கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் துரைராசா 29.06.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் கனகம்மாவின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (62376)

தகவல்:
**து.மதனகுமார் (மகன்)**

### சுப்பிரமணியம் அம்பிகபாகன்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அம்பிகபாகன் 29.06.2007 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவபாதம் (புத்தொளி ஆசிரியர்) மற்றும் ருக்குமணி தேவியின் அன்பு மருமகனும் சித்திராதேவியின் அன்புக் கணவரும் கேசவி (யா/ இந்து மகளிர் கல்லூரி), கேதுசன் (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மபாலன், விஜயராணி, நடராஜா, கமலராணி, யோகிஸ்வரன், யோகராணி ஆகியோரின் சகோதரரும் சிவலோகநாதன் (பிரான்ஸ்), சித்திரலேகா (கனடா), சிவதனேஸ்வரன் ஆகியோரின் மைத்துனருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''செல்வ அகம்'',
ஆனைக்கோட்டை. (62378)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

**கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உயர் கல்வி**

Belarus (பெலாரூஸ்), Poland(போலாந்து), Ukraine (உக்ரெய்ன்), Russia (ரஷ்யா) பிரபல பல்கலைக்கழகங்களில்
மருத்துவம் (MBBS, MD), பொறியியல், கலை, வர்த்தகம், சட்டம், கணனியியல் கற்கைநெறிகள்

* A/L புள்ளி குறைந்த மாணவர்களுக்கு பிரத்தியேக ஏற்பாடுகள்
* O/L மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள்
* வங்கி நிலுவைகள்,தூதரக நேர்காணல் தேவையில்லை
* விண்ணப்பித்து 20 நாட்களுக்குள் பல்கலைக்கழகம் செல்லலாம்.
* 100% விசா உத்தரவாதம்.
* விடுமுறைகள், பயிற்சிப் பட்டறைகள் Seminar போன்றவற்றுக்கு Swiss, Italy, France, Germany போன்ற நாடுகளுக்கு செல்ல விசேட ஏற்பாடுகள்/அறிவுரைகள்
* பெண்களுக்கு அதிக பாதுகாப்பு, விடுதி ஏற்பாடுகள் (தாய்/ தந்தை 2-3 மாதங்கள் மாணவியுடன் தங்கியிருக்கவும் விசேட ஏற்பாடுகள்)
* சக புதிய மாணவ,மாணவிகளுடன் குழுவாக பயணம்.
எமது நிறுவனத்தினூடாக செல்லும் மாணவர்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்குகின்றோம்
* Passport, O/L, A/L இலங்கை அரசாங்க சான்றிதழ்களை உடனடியாகப் பெற ஏற்பாடுகள்
* யாழ் - கொழும்பு வருவதற்கான உடனடி ஏற்பாடுகள்
* கொழும்பு வந்து ஓரிரு நாட்களில் பயணம்
* வெளிநாட்டு கரன்சி,Travellers Cheque பெற உதவுதல்.
* விமான பயண ஏற்பாடுகள்,விமான நிலையம் வரை எமது சேவை

Spot Admission

Overseas Student Programme (Office of the Srilankan Coordinator)

இல.02 திருவள்ளுவர் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் தொலைபேசி: 0777-250555/ 021-2228247
இல. 01 முதலாம் குறுக்கு பிள்ளையார் கோயில் வீதி, கல்லடி ... தொலைபேசி: 0652224872

தொடர்புகளுக்கும் தகவல்களுக்கும்
Dr. M.Mylashan MBBS(SL) 0777 - 250555 / 0115669571
குறிப்பு: தொலைபேசியில் முன் அனுமதி பெற்றே சந்திக்கவும். (பெற்றோருடன் வருதல் முக்கியம்.)

முக்கிய குறிப்பு: ஏற்கனவே தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டவர்களும், புதிய மாணவர்களும் 03.07.2007 தொடக்கம் 15.07.2007 வரை நேரடியாகச் சந்தித்து அனுமதியைப் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.